# 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர்:
மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு
மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு
(2019.01.01 - 2019.12.09 ஆம் திகதி வரை)

சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு
அபிவிருத்தி அமைச்சு
(2019.12.10 - 2019.12.31 வரை)

## செலவினத் தலைப்பு 140

# உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| அத்தியாயம் 01 - | நிறுவன விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு | 5-31 |
| அத்தியாயம் 02 - | முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் | 32-34 |
| அத்தியாயம் 03 - | வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | 35-40 |
| அத்தியாயம் 04 - | செயலாற்றுகை சுட்டிகள் | 41 |
| அத்தியாயம் 05 - | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை | 42-44 |
| அத்தியாயம் 06 - | மனித வள விபரம் | 45-48 |
| அத்தியாயம் 07 - | இணக்க அறிக்கை | 49-57 |

# அத்தியாயம் 01

## நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப்பொழிப்பு

### 1.1 அறிமுகம்

இரு நூற்றாண்டுகால வரலாற்றுக்கு உரிமை கூறும் இலங்கை பெருந்தோட்ட சமுதாயத்தினரின் ஆரம்பமானது இந்நாடு பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம் வரை நீண்டு செல்கின்றது. பிரித்தானியர்களினால் 1840 இல் மலையகத்தில் கோப்பிப் பயிர்ச்செய்கைக்காக தொழிலாளர்களாக தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட இவர்கள் கோப்பிப் பயிர்ச்செய்கை அழிவடைந்ததை அடுத்து ஏற்படுத்தப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கைகளை மையமாகக் கொண்டு விசேடமான தனிமைப்பட்ட ஒரு இனப்பிரிவினராக வளர்ச்சியடைந்துள்ளனர்.

லயன் அறைகளைக் கொண்ட வரிசையாக அமைந்த வீடுகளை தமது இருப்பிடமாகக் கொண்டு மிகவும் வறிய தொழிலாளர்களின் வாழ்க்கை முறைக்கு உரிமை கூறும் இவர்களை மனித அபிவிருத்திச் சுட்டிகளுடன் (நகர மற்றும் கிராமிய) ஒப்பிடும்போது ஏனைய இனப்பிரிவினர்களைவிட கணிசமான சமூக முரண்பாடுகளை எதிர்கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். தேசிய சமூக அபிவிருத்தி சுட்டிகளுடன் ஒப்பிடும் போது இம்மக்களின் சமூக அபிவிருத்தி சுட்டிகள் மிகவும் பின்னடைவையே காட்டுகின்றன.

பெருந்தோட்ட மக்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 5% பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெருந்தோட்ட பிரதேசங்களில் இத்துறையில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை ஒரு மில்லியனுக்கு அதிகமான மக்கள் ஓர் சிறிய காணித்துண்டொன்றிற்கு கூட உரிமையில்லாத நிலையில் இப்பிரதேசங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் விசேடமாக மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுகின்ற களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களை உள்ளடக்கிய தோட்டப் பிரதேசங்களில் பரவி வாழ்கின்றனர். இந்த மாவட்டங்களின் மொத்த சனத்தொகை 9 மில்லியன்களாக இருப்பதுடன் இவர்களில் ஒரு மில்லியனை அண்மித்த சனத்தொகை பெருந்தோட்டச் சமூகமாகும். இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 11 சதவீத அளவான உயர் பெறுமதியாகும்.

**பெருந்தோட்டத்துறை பற்றிய பிரதான தரவுகள் (தேயிலை சிறு நிலங்கள் தவிர)**
**காணிகள் தொடர்பான விபரங்கள்**

- பெருந்தோட்ட கம்பனிகளின் எண்ணிக்கை - 23
- தோட்டங்களின் எண்ணிக்கை - 453
- மொத்த நிலப்பரப்பு 280,034 ஹெக்டெயார்
  - தேயிலை - 80,637 ஹெக்டெயார்
  - இறப்பர் - 45,881 ஹெக்டெயார்
  - தென்னை - 9,482 ஹெக்டெயார்
  - பயிரிடப்படாத நிலப்பரப்பு - 117,275 ஹெக்டெயார்

  (மூலம்:- Annual Health Return, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் (பெ.ம.அ.நி 2014)

| பெருந்தோட்ட சனத்தொகை விபரங்கள் - மாவட்ட மட்டத்தில் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விபரம் | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | பதுளை | மொனராகலை | இரத்தினபுரி | கேகாலை | ஆண்டு | மூலம் |
| தோட்டப் பிரதேசத்தை உள்ளடக்கிய மாவட்டங்களின் மொத்த சனத்தொகை 2019 | 1,284,000 | 1,476,000 | 522,000 | 768,000 | 1,130,000 | 863,000 | 880,000 | 496,000 | 1,171,000 | 887,000 | 2019 | பதிவாளர் நாயகம் திணைக்களம் |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த தோட்ட சனத்தொகை* 2019 | 39,547 | 91,807 | 20,567 | 410,726 | 20,001 | 23,905 | 166,056 | 9,176 | 107,264 | 60,316 | 2019 | தரவுகள் இற்றைப்படுத் தப்பட்டுள்ளது |
| தோட்ட சனத்தொகையின் பிரதிநிதித்துவம்* % | 3.08 | 6.22 | 3.94 | 53.48 | 1.77 | 2.77 | 18.87 | 1.85 | 9.16 | 6.80 | 2019 | |
| | | | | | | | | | | | | |
| மொத்த தோட்ட சனத்தொகை* சிங்களம் - 2019 | 7,909 | 12,227 | 1,788 | 22,879 | 9,237 | 8,020 | 12,986 | 964 | 15,381 | 9,688 | 2019 | |
| மொத்த தோட்ட சனத்தொகை* தமிழ் - 2019 | 31,506 | 78,605 | 18,463 | 385,417 | 10,721 | 15,738 | 150,890 | 8,125 | 90,648 | 50,334 | 2019 | |
| மொத்த தோட்ட சனத்தொகை* முஸ்லிம் -2019 | 106 | 830 | 274 | 2,063 | 12 | 142 | 1,894 | 67 | 1,021 | 220 | 2019 | |

**மூலம் : பதிவாளர் நாயகம் திணைக்களம்**
*தரவு இற்றைப்படுத்தப்பட்டவை

**தோட்டத் துறையுடன் தொடர்புடைய ஏனைய தரவுகள்**

| குறிகாட்டி | தோட்டம் | கிராம | நகர | தேசிய | ஆண்டு | மூலம் |
|---|---|---|---|---|---|---|
| வறுமை சதவீதம் | 8.8 | 4.3 | 1.9 | 4.1 | 2016 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் - HIES |
| மாதாந்த வீட்டு அலகு வருமானம் | 34,804 | 58,137 | 88,692 | 62,237 | 2016 | |
| ஆரம்பக் கல்விச் சதவீதம் | 5.0 | 74.0 | 21.0 | 100.0 | 2018 | புள்ளிவிபரவியல் அலகு, கல்வி அமைச்சு |
| இரண்டாம் நிலை கல்விச் சதவீதம் 6 ஆம் தரம் முதல் 10 தரம் வரை | 5.0 | 68.9 | 26.2 | 100.0 | 2018 | |
| மூன்றாம் நிலை கல்விச் சதவீதம் 11 தரம் முதல் 13 ஆம் தரம் வரை | 3.5 | 63.0 | 33.6 | 100.0 | 2018 | |
| 05 வயதிலும் குறைந்த பிள்ளைகள் | | | | 1,871,000 | 2019 | பதிவாளர் நாயகம் திணைக்களம் |
| 5 வயதிலும் குறைந்த பிள்ளைகளின் குட்டைத்தன்மை | 31.7 | 17.0 | 14.7 | 17.3 | 2016 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் - சமூக விஞ்ஞான மற்றும் சுகாதார மதிப்பீடு |
| 5 வயதிலும் குறைந்த பிள்ளைகளின் நிறை குறைவு | 29.7 | 20.8 | 16.4 | 20.5 | 2016 | |
| 5 வயதிலும் குறைந்த பிள்ளைகளின் வளர்ச்சி | 13.4 | 15.6 | 12.9 | 15.1 | 2016 | |

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட வெளியீட்டின் 25 ஆம் பிரிவிற்கும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 17,23 மற்றும் 24 ஆம் பிரிவுகளுக்கும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 11 (1) பிரிவிற்கும் அமைவாக உணவு, உடை, உறையுள் மற்றும் சுகாதார பாதுகாப்பு, தேவையான சமூக பாதுகாப்பும் கொண்டு தன்னுடையதும் தனது குடும்பத்தினதும் சுகாதாரத்திற்கும் நலனுக்கும் தேவையான வாழ்க்கை முறையை அனுபவிப்பதற்கும், தன்னால் கட்டுப்படுத்த முடியாத இடர்களின் போது பாதுகாப்பைப் பெறுவதற்கும், முழுமையான ஓர் மனிதனின் உருவாக்கத்திற்கான தனிமையையும், தனிமையை அனுபவிப்பதற்கான உரிமையும் சகல மனிதனுக்கும் உரித்தாகவுள்ளது.

இலங்கையும் தனது அரசியலமைப்புச் சட்டத்தின் 10,11,13 மற்றும் 14 ஆம் சரத்துக்களில் இவ்வுரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் சகல மக்கள் கூட்டத்திற்கும் இவ்வணைத்து பிரதான சேவைகளையும் வசதிகளையும் அனுபவிக்கும் உரிமையையும் பெற்றுக்கொடுக்கும் பாரிய பொறுப்பை பல தசாப்தங்களாக மேற்கொண்டு வருகின்றது.

தென்னிந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்டு இலங்கையின் மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் குடியமர்த்தப்பட்டு சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் தனிமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட சமுதாயம் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இருந்தே பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தங்கி வாழ்ந்ததால் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அடிப்படை சேவைகளை அரிதாகவே அனுபவித்து வந்தது.

இதன் விளைவாக இருநூற்றாண்டுகளாக இலங்கையின் தேசிய வருமானத்திற்காக பெரும் பங்காற்றிய மக்களுக்கு இவ்வரப்பிரசாதங்கள் கிடைப்பதற்கு தாமதமாகியது. எனவே, அரச மற்றும் தனியார் துறையில் சட்ட ரீதியாக காணப்படும் சில பொருந்தா தன்மைகள் காரணமாக 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தனியார் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் தமது வாழ்க்கையை தொடர்கின்றனர்.

இவ்வாறானதொரு மக்கள் சமுதாயத்திற்கு உரிய சேவைகளை வழங்குவதில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்து அச் சமுதாயத்தின் சமூக அபிவிருத்தியை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து கொள்வதற்காக சரியானதொரு பொறிமுறையை உருவாக்குவதற்கான தேவை காணப்பட்டது.

அதற்கமைய பெருந்தோட்ட சமுதாயத்தினர் இதுவரை காலமும் எதிர்நோக்கிய சமூக முரண்பாடுகளை இழிவுபடுத்தி ஏனைய இனங்களுக்கு சமமான சமூக அந்தஸ்து, கௌரவம், மற்றும் சுயமரியாதையைக் கொண்ட கிராமிய சமுதாயமாக வளர்ச்சியுறச் செய்யும் நோக்கத்துடன் புதிய அணுகுமுறையின் கீழ் அவர்களின் இருப்பிடங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி போன்ற துறைகள் முன்னிலையாதல் தொடர்பாக விசேட அமைச்சுக்கள் தாபிக்கப்பட்டதுடன் கடந்த இரண்டு தசாப்தங்களின் போது கீழ் உள்ளவாறு பெயர் பெற்ற அமைச்சுக்கள் ஊடாக பெருந்தோட்டத் துறையில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரம் தொடர்பாக விசேடமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் சமூக அபிவிருத்தி அமைச்சு
- இளைஞர் முன்னேற்றம் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
- சமூக அபிவிருத்தி மற்றும் சமத்துவமின்மையை இல்லாதொழித்தல் அமைச்சு
- கால்நடை வள மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
- பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
- மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

2019.11.17 ஆம் திகதி தாபிக்கப்பட்ட புதிய அரசின் கீழ் 2019.12.10 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பெருந்தோட்டச் சமூகம் உள்ளடங்கலாக கிராமிய பிணக்குகளின் காரணமாக இடம்பெயர்ந்த மொத்த சமூகத்தின் முன்னேற்றம் தொடர்பாக சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி என பெயரிடப்பட்ட புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சொன்று தாபிக்கப்பட்டது. இந்தப் புதிய அமைச்சின் கீழ் அதுவரை மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருந்த

- பெருந்தோட்ட துறைக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகாரசபை
- தோட்டத்துறையின் சுய தொழில் சுழற்சிக் கடன் நிதியம்
- பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம்
- சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் என்பன மேலதிகமாக உள்ளடக்கப்பட்டன.

அதன் பிரகாரம் சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட இந்த செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்படுவது செலவினத் தலைப்பு இல 140 இன் கீழ் முன்னர் காணப்பட்ட மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சும் அதன் பிறகு சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றுகையாகும்.

## 1.2. நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

### 1.2.1 2019.12.09 ஆம் திகதி வரை இருந்த "மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

### தூரநோக்கு

பெருந்தோட்டத்துறை சமூகத்தை ஏனைய சமூகங்களுடன் சரிசமமாக இருக்கும் வகையில் கௌரவம், சுய மரியாதை மற்றும் சமூக அந்தஸ்துடன் கூடிய ஒரு கிராமிய சமூகமாக நிலைமாற்றுதல்.

### பணிக்கூற்று

வாழ்விடம், வாழ்க்கைத் தரம் மற்றும் சமூகப் பொருளாதார வசதிகளை முன்னேற்றுவதனூடாக பெருந்தோட்டத்துறை சமூகத்தின் நலன்களை மேம்படுத்தல்.

### குறிக்கோள்கள்


தோட்டத்துறை மக்களின் வாழ்வாதார நிலைமையை மேம்படுத்தல் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல் மூலம் அவர்களை வலுவூட்டும் நோக்கில்.

1. வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
2. வாழ்வாதார வழிகளை அறிமுகம் செய்து வருமான மட்டத்தை உயர்வடையச் செய்தல்.
3. சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் அவர்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.
4. முன் பள்ளி முதல் தொழில்சார் கல்வி வரையான கல்வி வசதிகளை வழங்குதல்.
5. திடீர் இடர் நிலைமைகளின் போது நிவாரணம் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

## 1.3. பிரதான பணிகள்

1. அரச மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றுகின்ற காணிகள் இல்லாத மக்கள் தொடர்பாக வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை நிர்மாணித்தல்.
2. கிராமிய தோட்டத் துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
3. தோட்டதுறை மக்களை வலுவூட்டுவதற்காக வாழ்வாதார வழி வகைகளை உருவாக்கும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
4. பெருந்தோட்ட சமூகத்தை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக கட்டியெழுப்புவதற்காக ஆரம்ப வசதிகள் உள்ளடங்கலாக ஏனைய தேவைகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
5. முன் பள்ளி மட்டம் முதல் தொழிற்பயிற்சி மட்டம் வரையான கல்வித் தேவைகள் தொடர்பாக அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் அடிப்படை வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
6. திடீர் இடர் நிலைமைகளின் போது தேவையான நிவாரண சேவைகளை வழங்குவதுடன் அவர்களை மீள இயல்பு நிலைமைக்கு திரும்பக் கொண்டுவருவதற்குத் தேவையான வசதிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்

## மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு
## (சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு ) - செலவின தலைப்பு -140
## நிறுவன விளக்கப்படம் (2019.12.31 ஆம் திகதியில்)



## 1.4.1. 2019.12.31 ஆம் திகதியில் அமைச்சின் அங்கீகரித்த மற்றும் உண்மை பதவியணி

| தொ இல | பதவி | சேவை | தரம் / வகுப்பு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | | உள்ளபடி பதவியணி | | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிரந்தர | அமைய / ஒப்பந்த | நிரந்தர | அமைய / ஒப்பந்த | |
| 1. | செயலாளர் | இ.நி.சேவை | விசேட தரம் | 1 | - | 1 | - | - |
| 2. | மேலதிக செயலாளர் | இ.நி.சேவை | விசேட தரம் | 2 | - | 2 | - | - |
| 3. | பணிப்பாளர் நாயகம் | இ.தி.சேவை | விசேட தரம் | 1 | | 1 | | |
| 4. | சிரேஸ்ட உதவி செயலாளர் | இ.நி.சேவை | I வகுப்பு | 1 | - | 1 | - | - |
| 5. | பணிப்பாளர் | இ.நி.சேவை | I வகுப்பு | 1 | - | 1 | - | - |
| 6. | பணிப்பாளர் | இ.தி.சேவை | I வகுப்பு | 1 | - | 0 | - | 1 |
| 7. | பணிப்பாளர் | இ.பொ சேவை | I வகுப்பு | 1 | - | 0 | - | 1 |
| 8. | பிரதான கணக்காளர் | இ.க.சேவை | I வகுப்பு | 1 | - | 1 | - | - |
| 9. | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சேவை | I வகுப்பு | 1 | - | 1 | - | - |
| 10. | உதவி செயலாளர் | இ.நி.சேவை | II/III வகுப்பு | 1 | - | 0 | - | 1 |
| 11. | உதவி பணிப்பாளர் | இ.நி.சேவை | II/III வகுப்பு | 3 | - | 1 | - | 2 |
| 12. | உதவி பணிப்பாளர் | இ.தி.சேவை | II/III வகுப்பு | 2 | - | 2 | - | - |
| 13. | உதவி பணிப்பாளர் | இ.பொ சேவை | II/III வகுப்பு | 2 | - | 1 | - | 1 |
| 14. | கணக்காளர் | இ.க.சேவை | II/III வகுப்பு | 2 | - | 1 | - | 1 |
| 15. | சட்ட அலுவலர் | | II/III வகுப்பு | 1 | - | 0 | - | 1 |
| 16. | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ. சேவை | அதியுயர் தரம் | 1 | - | 0 | - | 1 |
| 17. | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இ.தொ.மற்றும் தொ. | II/I | 1 | - | 1 | - | - |
| 18. | மொழி பெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் | I/II வகுப்பு | 2 | - | 0 | - | 2 |
| 19. | புள்ளி விபரவியல் உத்தியோகத்தர் | | | 1 | - | 1 | - | - |
| 20. | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | தற்காலிகம் | | - | 1 | - | 1 | - |
| 21. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | இ.இ.அ..சேவை | I/II/III வகுப்பு | 19 | - | 11 | 5 | 3 |
| 22. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இ.தொ.சேவை | I/II/III வகுப்பு | 8 | - | 0 | 3 | 5 |
| 23. | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | இ.தொ.மற்றும் தொ. | 3 - III/II/I | 2 | - | - | - | 2 |
| 24. | அரச முகாமைத்துவ உத்தியோகத்தர் | அ.மு.சே | I/II/III வகுப்பு | 25 | - | 16 | - | 9 |
| 25. | பெருந்தோட்ட சமுதாய தொடர்பாடல் வசதியளிப்பாளர் | அமைச்சுக்கான | | 225 | - | 219 | - | 6 |
| 26. | புகைப்பட கலைஞர் | தற்காலிகம் | | 1 | - | - | 1 | - |
| 27. | வீடியோ கெமரா கலைஞர் | தற்காலிகம் | | 1 | - | - | 1 | - |
| 28. | புகைப்பட உதவியாளர் | தற்காலிகம் | | 1 | - | - | 1 | - |
| 29. | சாரதிகள் | இணைந்த சாரதி சேவை | I/II/III விசேட | 17 | - | 14 | - | 3 |
| 30. | அலுவலக உதவியாளர் | அலுவலக உதவியாளர் | I/II/III விசேட | 16 | - | 16 | - | - |
| | மொத்தம் | | | **341** | **1** | **291** | **12** | **39** |

## 1.5 அமைச்சின் கீழ் உள்ள பிரிவுகள்

### 1.5.1 செயலாளரின் பிரிவு

அமைச்சின் தலைவரும், அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருமாக பணியாற்றும் அமைச்சு செயலாளரின் கீழ் இப்பிரிவு இயங்குவதுடன் அப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள விசேட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சுக்குமிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு மட்டுமல்லாது கூட்டங்களை ஏற்பாடு செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளுதல் செயலாளர் பிரிவினால் பிரதானமாக நிறைவேற்றப்படுகின்றன.

அதே போன்று அமைச்சு விடயப் பரப்பிற்கு ஏற்ப உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் மட்டுமன்றி தூதுவராலயங்களுடன் ஒருங்கிணைப்பு தேவைக்கு ஏற்ப தேசிய இராஜதந்திர மட்டத்தில் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் என்பன செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்படும்.

### 1.5.2 நிர்வாகப் பிரிவு

பெருந்தோட்ட மக்கள் சமுதாயத்திற்காக அமைச்சினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களை குறித்த காலப்பகுதியினுள் நிறைவு செய்வது தொடர்பாக தேவையான அமைச்சின் நிறுவக கட்டமைப்பினை வடிவமைத்தல், புதிய பதவிகளை உருவாக்குதல், புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளல், பயிற்சி வழங்கல் உட்பட அமைச்சின் மனிதவளத்தை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்தல் என்பன நிர்வாக பிரிவின் பிரதான பணிப்பொறுப்புகளாகும். இவற்றிற்கு மேலதிகமாக

- அமைச்சின் பொதுவான நிர்வாகம்
- உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். மற்றும் ஏனைய நிறுவக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பிரத்தியேக கோவைகளைப் பேணல்.
- பதவியணியினர் தொடர்பான விபரங்களை இற்றைப்படுத்துதல் மற்றும் தேவையான நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- நிறுவனத்தின் மனிதவள திட்டத்தை தயார் செய்தல்.
- தகவல் அறியும் சட்டத்திற்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உத்தியோத்தர்களின் விடுமுறை குறித்த பதிவேடுகள், கோவைகளைப் பேணல்.
- உத்தியோத்தர்களின் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அமைச்சின் வாகனத் தொகுதி மற்றும் வாகனங்களைப் பேணல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுடன் இணைப்பை ஏற்படுத்துதல்.
- தாபனவிதிக் கோவை, நிதிப் பிரமாணம், சுற்றறிக்கைகள் மற்றும் வேறு கட்டளைச்சட்டங்களுக்கு அமைய பணியாற்தொகுதியை வழிநடத்துதல் போன்ற செயற்பாடுகள் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.5.3 அபிவிருத்தி பிரிவு

பெருந்தோட்டத்துறை மக்களின் நலன்புரி விடயங்கள், அவர்களின் வாழ்விடம், வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக பொருளாதார வசதிகளை மேம்படுத்தவது தொடர்பாக அமைச்சு 5 கூறுகளின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது. அமைச்சு, அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனமொன்றான பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக இச்செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. இச்செயற்றிட்டங்களை கண்காணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பான அனைத்துப் பொறுப்புகளையும் உள்ளடக்கி அரசாங்கத்தின் திரட்டு நிதி மற்றும் இந்திய அரசாங்கத்தின் நன்கொடையை பயன்படுத்தி அமைச்சின் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கான பிரதான செயற்பாடுகள் அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு பொறியியல் பிரிவு பெரும் பங்களிப்பை வழங்கிவருவதுடன் அபிவிருத்தி பிரிவினால் பின்வரும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கீழ் குறிப்பிட்ட செயற்பாடுகள் உள்ளடங்கலாக மேற்படி செயற்பாடுகளை உரிய பிரகாரம் செயற்படுத்துவதற்கு பொறியியல் பிரிவு மட்டுமல்லாது திட்டமிடல் பிரிவும் அபிவிருத்தி பிரிவுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

1. பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தியின் கீழ் விசேட செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
    I. லயன் வீடுகளில் பழுதடைந்த கூரைகளைத் திருத்தி மீள் தகரமிடல்.
    II. சுகாதாரமான குடிநீர் விநியோக முறைமையை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்தல்.
    III. சுகாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டம்.

IV. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்தல்.

V. தோட்ட மற்றும் தோட்ட வைத்தியசாலைக்கு பிரவேசிப்பதற்கான பாதை அபிவிருத்தி ( வீதி, ஒற்றையடிப் பாதைகள், ஒற்றைப் பாலம் மற்றும் பாலங்கள்)

VI. பொது வசதிகள் அபிவிருத்தி

- சனசமூக /கலாசார நிலையம்
- விளையாட்டு மைதானங்கள்
- தடுப்புச் சுவர்கள்
- முன்பாடசாலைகளை மேம்படுத்தல்
- மின் வசதிகள் விநியோகம்
- மண்டபம் மற்றும் கதிரை, ஒலிபெருக்கி இயந்திரம் போன்ற உபகரணங்களை விநியோகித்தல்
- வேலிகள் அமைத்தல், பாடசாலை கட்டட திருத்தம் செய்தல் போன்ற பிற வசதிகள்.

2. தோட்ட மற்றும் கிராமியப் பிரதேசங்களில் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் செயற்பாட்டின் கீழ் பின்வரும் செயற்றிடங்களை அமுல்படுத்தல்.

I. பயிற்சி /அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

- போதைவஸ்து நிவாரணம்
- சிறு நீரக நோய்க் கட்டுப்பாடு
- சுற்றாடல் பாதுகாப்பு
- உணவு உற்பத்தி
- கிராமிய சமூகங்களை வலுப்படுத்தல். உதாரணம்: மகிழ்ச்சியான குடும்பம், மகிழ்ச்சியான கல்வி, மகிழ்ச்சியான தொழில்.
- போசாக்கு நிறைந்த உணவு மற்றும் உணவுப் பழக்க வழக்கம்
- தனியார் திறன் அபிவிருத்தி

II. வறுமை நிலையை குறைத்தல் / பதவியணி வலுப்படுத்தல்.

- வீட்டுத்தோட்டம்
- திறன் அபிவிருத்தியை மேம்படுத்தல் தொடர்பாக மகளிர் சமூகங்களை உருவாக்குதல் / வலுப்படுத்தல்.
- பெண்களுக்கான நிதி முகாமை நிகழ்ச்சித்திட்டம்.

3. வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.

I. ஹரித ரண் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் புதிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடமைப்பு செயற்றிடங்களை அமுல்படுத்தல்.

II. இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்ட பங்களிப்பு மற்றும் மேற்பார்வை செய்தல்.

III. ஹரித ரண் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், புதிய வாழ்வாதார வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளுக்கான நீர், வீதி மற்றும் மின் விநியோக செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.

IV. புதிய வாழ்வாதார வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளுக்கு உறுதிகளை வழங்குதல்.

V. புதிய வாழ்வாதார வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய கடன் தவணைகளை அறவிட்டுக் கொள்ளல்.

4. முன்னேற்ற அறிக்கையைத் தயார் செய்தல்.
5. பொறியியலாளர் மதிப்பீடுகள், செயற்றிட்ட வழிகாட்டல்களை தயார் செய்தல்.
6. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.
7. தள பரீட்சிப்பு, மேற்பார்வை மற்றும் கள விஜயங்களை நடாத்துதல்.
8. தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் உள்ள ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம், ரம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாசார நிலையம், நோர்வூட் இல் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டு கட்டிடத்தொகுதி மற்றும் பிரஜா சக்தி அபிவிருத்தி நிலையம் போன்றவற்றின் முழுமையான மேற்பார்வை.
9. இந்திய நன்கொடையின் கீழ் ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல்.

### 1.5.4 திட்டமிடல் பிரிவு

அமைச்சின் குறிக்கோள்களை அடைவதற்கு ஏதுவான பின்வரும் செயற்பாடுகள் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்தல் அதற்கமைய அமைச்சின் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தை தயாரித்தல்.
- அமைச்சின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மூலதன மதிப்பீடுகளை தயாரித்தல்.
- தேசிய செயலாற்றுகைத் திட்டத்தை (2016 / 2020) நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.
- புதிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை இனம்காணல், செயற்றிட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல்.
- உத்தேச செயற்றிட்டங்களை தருவித்தல், அவற்றில் பொருத்தமான செயற்றிட்டங்களை அறிமுகம் செய்தல், சாத்தியப்பாட்டு மதிப்பீடு, செயற்றிட்டங்களை அமுல்படுத்தல். மற்றும் மதிப்பீடு, கள மதிப்பாய்வு, முன்னேற்ற மீளாய்வு, நிதிச் செயலாற்றுகை மற்றும் பௌதீக முன்னேற்றம் உள்ளடங்கலான முன்னேற்ற அறிக்கையைத் தயார் செய்தல் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
- அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- இதுவரை பெரும் குறைபாடாக காணப்பட்ட பெருந்தோட்ட துறைசார்ந்த விபரங்களை பெற்றுக்கொள்வதற்கான (இலங்கை தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் நிறுவனம் (ICTA),Price watercoop ஆகியவற்றுடன் இணைந்து ) தரவுத் தளம் அமைத்தல், பிரதேச மட்டத்தில் அது தொடர்பாக உரிய அலுவலர்களை அறிவுறுத்தல் தொடர்பான கருத்தரங்குகளை நடாத்துதல், தரவுகளை சேகரித்தல் மற்றும் இற்றைப்படுத்துதல்.

### 1.5.5 கணக்குகள் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் பெறுகைச் செயற்பாட்டினூடாக வழங்குதல், சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளை வழங்குதல், அபிவிருத்தி செயற்பாடுகள் சார்ந்த கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், பேணல், அரசாங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளின் பொறுப்பு, அரச வருமானத்தை சேகரித்தல் கணக்குப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.5.6 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக காணப்படும் உள்ளக கட்டமைப்பை கண்காணிப்பதுடன் குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக காணப்படுகின்ற உள்ளக பரிசீலனைகள் தொடர்பான முறைகள் பற்றி தொடர்ச்சியாக கண்காணித்தல், வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் உத்தேச திட்டங்கள் தொடர்பான முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் குறித்த விடயங்களை தெரிவித்தல், வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல், கணக்காய்வு வினாக்கள் தொடர்பாக பதில்களை தயார் செய்தல் என்பன உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.6 அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### 1.6.1 பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராமிய அபிவிருத்தி அதிகார சபை

இந்த அமைச்சின் பிரதான நோக்கங்களுள் ஒன்றான புதிய கிராம எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்துவதைப் பிரதான அபிலாசையாகக் கொண்டு தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றும் நோக்கில் அமைச்சுடன் இணைந்த அதிகார சபை ஒன்றை தாபிப்பதற்கான தேவை உருவாகியது.

அதன் பிரகாரம் 2018.06.25 ஆம் திகதி பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையினை தாபிப்பதற்கான 2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

#### 1.6.1.1. அதிகார சபையின் செயற்பணி

பெருந்தோட்டத் துறையில் வாழ்கின்ற மக்கள் ஏனைய இனக் குழுக்களுடன் சமமான தரத்தினையுடைய சமூகமொன்றாக உருவெடுத்தல்.

#### 1.6.1.2. அதிகார சபையின் தூரநோக்கு

பெருந்தோட்டச் சமூகம் ஏனைய இனக் குழுக்களுடன் சமமாக அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தை பெற்றுக் கொள்வதற்கு போதியளவான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது வசதிகளுடன் கூடிய புதிய கிராமங்களை தோட்டத்துறையினுள் உருவாக்குதல்.

### 1.6.1.3 அதிகார சபையின் குறிக்கோள்கள்

1. பெருந்தோட்ட வலயத்தில் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் ஊடாக இனங்காணப்பட்ட பிரதேசங்களில் பெருந்தோட்டச் சமூகம் பிரதான சமூக நீரோட்டத்துடன் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.
2. இனங்காணப்படட பிரதேசங்களில் பெருந்தோட்ட சமூகம், அவர்களுக்கு தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு பங்களிப்பு செய்யக் கூடிய வகையில் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல்.

### 1.6.1.4. அதிகார சபையின் செயற்பாடுகள்

1. பெருந்தோட்டப் பகுதிகளில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்தின் திட்டம், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
2. அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பெருந்தோட்டப் பகுதியின் ஏனைய தேசிய, மாவட்ட ரீதியில் மற்றும் பிரதேச ரீதியில் நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.
3. புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரிக்கும் போது பெருந்தோட்டப் பகுதிகளின் சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களின் பங்களிப்பினை உறுதி செய்தல்.
4. பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள வீடுகளின் சட்ட ரீதியான குடியிருப்பாளர்களுக்கு அந்த வீடுகளின் உரிமையை வழங்குவதற்கான உறுதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் இளைஞர் சமூகத்தினரின் கல்வி விருத்திக்காக மூன்றாம் நிலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
6. பெருந்தோட்ட சமூகத்தினருக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதனை இலகுபடுத்துவதற்காக மாகாண சபைகள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களின் பிரதேச மட்டத்திலான அலுவலகங்களுடன் இணைந்து பணியாற்றல்.
7. பெருந்தோட்ட சமூகத்தினருக்கான மாற்று வாழ்வாதார சந்தர்ப்பங்களை மேம்படுத்தல். மற்றும் அது தொடர்பாக தேவையான வழிகாட்டல் மற்றும் உள்ளீடுகளை வழங்குதல்.
8. தமது வாழ்வாதார சந்தர்ப்பங்களை கட்டியெழுப்புவதற்காக பெண்கள், சிறுவர்கள், வயது வந்தோர்கள் மற்றும் விசேட தேவைகளைக் கொண்ட நபர்கள் உள்ளிட்ட பெருந்தோட்டத் துறையின் பல்வேறு சமூகக் குழுக்களை வலுவடையச் செய்தல்.
9. பெருந்தோட்டப் பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளில் சட்ட ரீதியான குடியிருப்பாளர்களின் வழிவந்தவர்களுக்கும் அந்த சட்ட ரீதியான குடியிருப்பாளர்கள் அனுபவிக்கும் அனைத்து வசதிகளும் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
10. பெருந்தோட்டப் பகுதிகளின் காணி மற்றும் நீர் மூலங்களின் பௌதீக நிலைமை பாதிக்கப்படுவதைக் குறைத்தல் மற்றும் சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கில் நிவாரண மற்றும் பரிகாரம் ஆகிய இரு வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தல்.
11. தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் வினவி இனம் காணப்பட்ட பிரதேசங்களில் அவதானமான பிரதேசங்களை இனங்காணல் மற்றும் வதிவிடத் தேவைக்காக சட்ட விரோதமாக குடியேறுவதிலிருந்து பாதுகாத்து அவற்றைப் பயனுள்ள மாற்றுப் பயன்பாட்டுக்குப் பயன்படுத்தல்.
12. பெருந்தோட்ட பகுதிகளில் போதியளவு சமூக சேவை வசதிகள் மற்றும் நிலைபேறான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதை மேம்படுத்தல்.

### 1.6.1.5. அதிகார சபையின் முகாமைத்துவம்

பெருந்தோட்டப் பகுதிகளுக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவத்திற்காக பதவி வழியாக நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 07 ஆகும்.

1. சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.
2. நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.
3. பெருந்தோட்ட விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.
4. பொது தொழில் முயற்சிகள் அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.
5. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.
6. வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.
7. காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.

அதற்கு மேலதிகமாக சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்டகட்டமைப்பு அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, நிதி மற்றும் மாகாண நிர்வாகம், ஆகிய துறைகளில் நிபுணத்துவமுள்ள நபர்களிலிருந்து நியமிக்கப்படும் ஆறு அங்கத்தவர்களும் இந்த முகாமைத்துவ சபையில் உள்ளடங்குவர். இதில் ஓர் அங்கத்தவர் பெருந்தோட்டக் கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கத்தினால் நியமிக்கப்படல் வேண்டும். அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களிலிருந்து அதிகார சபையின் தலைவர் மற்றும் உப தலைவர் ஆகிய இருவரும் நியமிக்கப்படுவர்.

பணிப்பாளர் நாயகம் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார் என்பதுடன் அவர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நிர்வாக சபையின் பரிந்துரைக்கு அமைய நியமிக்கப்படுவார். பணிப்பாளர் நாயகம் பணிக்குழாத்தின் நிர்வாகம் உள்ளிட்ட அதிகார சபையின் நடவடிக்கைகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக பணியாற்ற வேண்டியதுடன் சபையின் அனைத்து தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகவும் பொறுப்புக் கூறல் வேண்டும். அவ்வாறே சபையினால் அவரிடம் ஒப்படைக்கப்படும் அனைத்து பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் அவர் கட்டுப்பட்டுள்ளார் என்பதுடன் சபையின் செயலாளராகவும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் பணிப்பாளர் நாயகத்தினால் பணிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்த அதிகாரசபை அதன் செயற்பாட்டுப் பணிகளை 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி முதல் ஆரம்பித்ததுடன் முகாமைத்துவச் சபை உரிய பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் முகாமைத்துவச் சபை கூட்டங்களை நடாத்தியுள்ளது.

முகாமைத்துவச் சபையின் சிபாரிசின்படி, கௌரவ அமைச்சரினால் சட்டத்தின் பிரகாரம் 2019.03.01 ஆம் திகதி முதல் அதிகாரசபை தொடர்பாக பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிகாரசபையின் பதவியணி தொடர்பாக 14 பிரிவுகளின் கீழ் 28 பதவிகளை உருவாக்குவது தொடர்பாக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் மற்றும் சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு என்பவற்றினால் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. எனினும், ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்பாக அங்கீகாரம் கிடைக்கப் பெறாததுடன் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக மற்றும் பின்னர் நிதி அமைச்சினால் ஆட்சேர்ப்புக்களை இடை நிறுத்தியதன் காரணமாக பணிப்பாளர் நாயகத்தை நியமித்தல் தவிர 2019 ஆம் ஆண்டின் போது ஆட்ச்சேர்ப்புக்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

**1.6.1.6. 2019.12.31 திகதியுள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரித்த மற்றும் உண்மை பதவியணி**

| தொடர் இல | பதவி | சேவை / சம்பள குறியீடு | சம்பள வகுப்பு | அங்கீகரித்த பதவியணி | | உண்மை பதவியணி | | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிரந்தர | தற்காலிக / ஒப்பந்த | நிரந்தர | தற்காலிக / ஒப்பந்த | |
| 1. | பணிப்பாளர் நாயகம் | HM 1-3-2016 | | 01 | | - | 01 | - |
| 2. | பணிப்பாளர் | HM 1-1-2016 | | 02 | | - | | 02 |
| 3. | பிரதேச பணிப்பாளர் | MM 1-3-2016 | II | 01 | | - | | 01 |
| 4. | உதவிப் பணிப்பாளர் | MM 1-1-2016 | II | 02 | | - | | 02 |
| 5. | கணக்காளர் | MM 1-1-2016 | II | 01 | | - | | 01 |
| 6. | பணிப்பாளர் சபை செயலாளர் சட்ட அலுவலர் | MM 1-1-2016 | II | 01 | | - | | 01 |
| 7. | நிர்வாக அலுவலர் | JM 1-1-2016 | II | 01 | | - | | 01 |
| 8. | தொழில்நுட்ப அலுவலர் | JM 1-1-2016 | II | 02 | | - | | 02 |
| 9. | மொழி பெயர்ப்பாளர் | MA 4-2016 | III | 02 | | - | | 02 |
| 10. | உதவி கணக்காளர் | MA-2-1-2016 | III | 01 | | - | | 01 |
| 11. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | MA 3-2016 | III | 02 | | - | | 02 |
| 12. | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2-2016 | III | 03 | | - | | 03 |
| 13. | சாரதி | PL 3-2016 | III | 04 | | - | | 04 |
| 14. | அலுவலக உதவியாளர் | PL 1-2016 | III | 05 | | - | | 05 |
| **மொத்தம்** | | | | 28 | - | - | 1 | 27 |

### 1.6.1.7. அதிகார சபையின் செயலாற்றுகை

### 1.6.1.7.1 2019.12.31 ஆம் திகதியில் அதிகார சபையின் நிதி நடவடிக்கைகள்

அதிகார சபைக்குச் சொந்தமாக நிதியம் ஒன்று காணப்படல் வேண்டும் என்பதுடன் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக காணப்படல் வேண்டும். 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தரச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அரச கூட்டுத்தாபனங்களின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகார சபையின் கணக்காய்வு தொடர்பில் ஏற்புடையதாக அமைதல் வேண்டும்.

ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்களுக்குள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கை எதிர்வரும் ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கி தயார் செய்யப்பட்ட ஆண்டறிக்கை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

2019.12.31 ஆம் திகதியாகும் போது அதிகாரசபைக்கு நிரந்தரமான கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சின் கணக்காளரினால் பதில் கடமை மேற்கொள்ளப்பட்டது.

### 1.6.1.7.2. 2019.12.31 ஆம் திகதியில் அதிகாரசபையின் நிதி முன்னேற்றம்

பெருந்தோட்டப் பிரதேசங்களில் புதிதாக திறக்கப்பட்ட கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் ரூ 4,000 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யுமாறு அதிகாரசபை கோரியிருந்த போதும் நிதி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டின் போது அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

அதிகாரசபையை தாபிப்பதற்காக ரூ. 3 மில்லியன் தொகை ஆரம்ப நிதி ஏற்பாடு அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டதுடன் அது அதிகாரசபை தொடர்பாக கட்டிட புணர்நிர்மாணச் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சினால் நேரடியாக செலவு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுக்காக ரூ. 2.5 மில்லின் தொகை அதிகாரசபையின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் தொடர்பாகவும் நிதி ஏற்பாடு செய்யப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டின் போது அதன் நிதிச் செயலாற்றுகை ரூ. 2.0 மில்லியன் தொகையாகும்.

| 2019.12.31 திகதியில் அதிகாரசபையின் மொத்த செலவினம் | | | |
|---|---|---|---|
| | மீண்டெழும் செலவினம் (ரூ.மி) | மூலதனச் செலவினம் (ரூ.மி) | |
| | | அலுவலக அபிவிருத்திச் செலவினம் | விசேட செயற்றிட்டங்கள் |
| தினஆள் சம்பளங்களும் படிகளும் | 1.99 | - | - |
| பொது நிர்வாகம் | 0.01 | - | - |
| மூலதன செலவு | - | 3.00 | |
| முழு மொத்தம் | 2.00 | 3.00 | - |

### 1.6.1.7.3. 2019.12.31 ஆம் திகதியில் அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றம்.

பெருந்தோட்டப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்ட புதிய கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் ரூ. 4,000 மில்லியன் நிதியை ஒதுக்குமாறு அதிகாரசபையினால் எதிர்பார்க்கப்பட்ட போதும் எந்தவித நிதி ஏற்பாடும் செய்யப்படாததனால் எந்தவித அபிவிருத்திச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படாததுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டு பணிகள் மாத்திரம் 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தின் தோட்டங்கள் இரண்டில் அமைச்சினால் சாட்டப்பட்டுள்ள முன்னோடி வீடமைப்புச் செயற்றிட்டம் தொடர்பாக ஆரம்ப பணிகளை ஆரம்பித்தல், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் அறிக்கையைப் பெற்றுக் கொள்ளல், பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் நேரடி நிர்மாணிப்புப் பணிகள் தொடர்பாக விலைமனு நடைமுறையின் ஊடாக ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் அமைச்சுப் பதவிகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

முன்னோடி 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வீட்டுக் கடன் தொடர்பில் தரவு 3,000 இற்கு அதிகமான தொகையொன்று தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளதுடன் கடன் வழங்கப்பட்டுள்ள உரிய அமைச்சு மற்றும் நிறுவனம் (NHDA) போன்றவற்றுடன் தற்பொழுது சேர்க்கப்பட்டுள்ள தரவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கும் மற்றும் கடன் தொகையை முழுமையாக செலுத்தியுள்ளபோதும் காணி தொடர்பாக உறுதி வழங்கப்படாத வீட்டு உரிமையாளர்களுக்கு உரிய உறுதிகளை வழங்குவதற்கு வசதிகளை மேற்கொள்வதற்கு இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது இந்த அதிகாரசபை கையளித்துள்ள ஒரு பணியாக இருப்பதுடன் அதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

### 1.6.2 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமானது பெருந்தோட்டத்துறையில் வாழும் மக்களின் வாழ்வாதார வழிமுறைகளை மேம்படுத்துவதற்காக முதலில் "தோட்டப்புற வீடு மற்றும் சமூக அபிவிருத்தி நிதியம்" என்ற பெயரிலான ஒரு நிறுவனமாக 1982 இன் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992 செப்டெம்பர் மாதம் 18ஆந் திகதி தாபிக்கப்பட்ட கம்பனியொன்றாகும்.

1992 இல் அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கமைய மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களை கையகப்படுத்தி அப் பெருந்தோட்டங்களின் முகாமைத்துவம் 23 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டன.

2002 ஒக்டோபர் மாதம் 25ஆந் திகதி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சமூகப் பிரிவுகளை ஒன்றிணைத்து பெருந்தோட்ட பிரிவில் வசிக்கின்ற மக்களின் சுகாதார மற்றும் ஏனைய சமூக நலன்புரி, வாழ்வாதார வழிவகைகளை மேம்படுத்தும் பொருட்டு தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திப் பொறுப்பு நிதியம், "பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்", என பெயர் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டது. தற்போது இந்த நிதியம் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் பெருந்தோட்டத் துறையின் பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்களின் வாழ்க்கை நிலைமையை கட்டியெழுப்புவதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒருங்கிணைப்புச் செய்து அதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக செயற்படுகின்ற இலங்கை அரசு, பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தோட்டத்துறையின் தொழில்சங்கங்களை உள்ளடக்கிய மூன்று சாரார்களைக் கொண்ட நிறுவனமாகும்.

தோட்ட மக்களின் நலன் கருதி ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனம் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்திச் நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை மேற்பார்வை செய்வதில் அரசின் உரிய அமைச்சு, தொழிற்சங்கங்கள், பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வேறு தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றி வருகின்றது.

விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற தலைவர் ஒருவர் மற்றும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர் உள்ளடங்கலாக பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கிய பணிப்பாளர் சபையொன்றின் கீழ் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் செயற்பட்டு வருகின்றது. இதன் பிரதான அலுவலகம் பத்தரமுல்லை, ரொபட் குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ளதுடன் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றது. காலி, இரத்தினபுரி, பதுளை, கேகாலை, கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள 07 பிரதேச அலுவலகங்கள் மூலம் பிரதான அலுவலகத்தின் பணிகள் வலுப்படுத்தப்படுகின்றது. பிரதேச பணிப்பாளர் உரிய பிரதேச அலுவலகத்தின் பிரதானியாக இருப்பதுடன் தொழில்நுட்பநிதி மற்றும் முகாமைத்துவ பதவியணி அவருக்கு ஒத்துழைப்பை வழங்குகின்றது.

#### 1.6.2.1. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிரதான குறிக்கோள்கள்

இலங்கையில் தோட்டக் காணிகள் மற்றும் அதனுடன் இணைந்த கைத்தொழில்கள் மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள தோட்ட தொழிலாளர் சமூகத்தின் மற்றும் அவர்களில் தங்கியுள்ளோர்களின் ஆரோக்கியம் மற்றும் நலன்புரியை மேம்படுத்தல், வறுமை நிலையை ஒழித்தல், வீடு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குதல், கல்வி மற்றும் அறிவை மேம்படுத்தல், வாழ்க்கைத் தரம் மற்றும் வாழ்வாதார நிலைமையை மேம்படுத்தல்.
மேற்படி இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

- தோட்டப்புற சமுதாயத்தின் லயன் அறைகளுக்கு பதிலாக தூய உறுதியுடன் கூடிய வீடுகள் (தனி வீடுகள் / மாடி வீடுகள்) தகுதி வாய்ந்தவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்

- பழைய லயன் அறைகளை புதுப்பித்தலும் அவற்றின் கூரைகளை மீளப்பொருத்தலும் (re-roofing).

- நீர் விநியோகம் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல்.


- சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைத் தாபித்தல் மற்றும் தகுதி வாய்ந்த சிறுவர் அபிவிருத்தி அலுவலர்களை இனங்காணல்.
- சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் (வீதி / கட்டிடம் / சமய நிலையங்கள் போன்றன)
- சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளும்

- சந்தைப்படுத்தல் வசதிகளுக்கான நடவடிக்கைகளை செய்து கொடுத்தல்.

- வாழ்வாதார வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- திடீர் இடர் நிலைமைகளின் போது வசதிகளை வழங்குகின்ற நிறுவனமொன்றாக செயற்படுதல்.

# பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிலையத்தின் கட்டமைப்பு



### 1.6.2.3. பெருந்தோட்ட மனிதவள நிதியம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் - தோட்ட தொழிலாளர்களின் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம்.

தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்து 1993 இல் தாபிக்கப்பட்டது. பிரதானமாக வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள இந்த சங்கங்கள் தற்போது பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படுகின்ற 435 தோட்டங்களை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இந்த கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை முன்னோடி சமுதாய அடிப்படையிலான அமைப்புகளாக நாட்டில் தாபிக்கப்பட்டுள்ளன. இவை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய அலுவலகங்களின் கண்காணிப்பின் கீழான தீர்மானங்களின் அடிப்படையில் உயர் தரப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்ச்சியாக கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றன. பெருந்தோட்டத் துறையில் வாழ்கின்ற தோட்டத்தொழிலாளர்களில் 99 சதவீதத்தினர் அளவில் இங்கு அங்கத்தவர்களாக இருப்பதுடன் தற்பொழுது ரூ. 250.00 தொகை மாதாந்த அங்கத்துவக் கட்டணமொன்றை சகல அங்கத்தவர்களும் செலுத்துகின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வு பெற்ற போதும் அனேகமாக இந்தச் சங்கத்தில் வாழ்நாள் அங்கத்தவர்களாக பணியாற்றுவது அவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் அதிகமாக இருக்கின்றமையினால் ஆகும்.

தோட்ட வீடமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற பயன்பெறுனர்கள் ஆரம்ப வீடமைப்புச் செயற்பாட்டில் முன்னுரிமை பணியொன்று இந்த சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் அரசினால் பெருந்தோட்டத் துறை தொடர்பாக வழங்கப்படுகின்ற அனேகமானவை உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தப்படுவதும் தோட்ட ஊழியர் கூட்டுறவு சங்கத்தின் ஊடாகவாகும்.

அதேபோன்று தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவு சங்கம் (வனிஸ) வங்கி என்ற பெயரில் அவர்களுடைய வங்கியின் ஊடாக தமது நிதியை உழைத்துக்கொள்வதுடன் கடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

கடன் வழங்குவதற்கு மேலதிகமாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி தோட்டங்களில் வசிப்பவர்களின் சேவைசார் தேவைகளுக்கான இலகு அணுகு முறைகளை செய்து கொடுத்து தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்கள் சில்லறை பொருட்கள் / நலன்புரி வர்த்தக நிலையங்கள், சிகை அலங்கார நிலையம், தொடர்பாடல் நிலையங்கள் போன்ற வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வசதி செய்துள்ளது. தோட்ட வீட்டு உரிமையாளர்களின் வாழ்க்கைத்தரம், அவர்களின் சுகாதாரம், போசாக்கு, சுகாதார வசதி மற்றும் சுத்தம் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு அவர்களுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் இலகுவாக அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களை தமது துணைப்பிரதிநிதிகளாக பயன்படுத்தி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பல்தேசிய கம்பனிகள் மற்றும் வேறு முன்னோடி தனியார் துறை அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து கூட்டாக இந்த நிறுவனத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது.

### 1.6.2.4. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் / கருத்திட்டங்கள்

இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக சிறந்ததொரு பணியினை நிறைவேற்றும் பெருந்தோட்ட சமூகத்தின் சமூக பொருளாதார துறையின் மேம்பாட்டுக்காக பெருந்தோட்டப் பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் அத்தியாவசியமான ஒரு தேவைப்பாடாக மாறியுள்ளது. இத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இந்த அமைச்சு தலைமை வகித்துச் செயற்படுவதுடன் அதன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முக்கியமான பங்காளித் தரப்பினராக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்திப் பொறுப்பு நிதியம் செயற்படுகிறது. அது தொடர்பாக அமைச்சினால் பெருந்தோட்ட அபிவிருத்தி நிதியத்திற்கு நிருவாக கொடுப்பனவொன்று வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ்:

- பெருந்தோட்டச் சமூகத்தை இலக்காகக் கொண்டு புதிய வீடுகளை நிர்மாணித்தல்.
- நீர் விநியோகம் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை வழங்கும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி நிலைய நிர்மாணிப்பு மற்றும் அபிவிருத்தி
- குழந்தை மந்தபோசணையை குறைப்பதற்கு அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்ட டிகிரி சக்தி போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்தின் மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்ளல்.

அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை வழங்கல் இந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அமைச்சினால் 2019 ஆம் ஆண்டு தொடர்பாக பெருந்தோட்டச் சமூகத்தை இலக்காகக் கொண்டு புதிய வீடமைப்பு அலகுகள் 250 ஐ நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான காணிகளை தெரிவு செய்து கொள்ளல் மற்றும் NBRO அறிக்கை தொடர்பாக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. அதே போன்று பூர்த்தி செய்யப்படாது காணப்பட்ட வீடுகளை நிர்மாணித்து பூரணப்படுத்தும் பணிகள் தொடர்பாக பெருந்தோட்ட மனிதவள நிதியத்தின் ஊடாக 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. அவற்றில் 428 வீடுகள் நிர்மாணிப்பு நிறைவடையும் போது பூரணப்படுத்தப்பட்டதுடன் எஞ்சிய வீடுகளை எதிர்வரும் வருடங்களில் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வீடமைப்பு செயற்றிட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக ஒரு வீடு தொடர்பாக 7 சதவீத நிருவாக கொடுப்பனவொன்று அமைச்சினால் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, இந்திய நன்கொடையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பு செயற்றிட்டத்தில் மின்சாரம், நீர் மற்றும் பிரவேச வீதி அபிவிருத்தி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி பெருந்தோட்ட மனிதவள நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பணி நிறைவு செய்யப்பட்ட வீட்டு அலகுகள் 699 தொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பின்னடைவான பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அதிக பங்களிப்புச் செய்வது பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமாகும். அதேபோன்று சிறுவர் மந்தபோசாக்கை கட்டுப்படுத்துதல் தொடர்பாக அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள "டிகிரி சக்தி" போசாக்கு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மேற்பார்வையின் கீழ் தோட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தேசிய தேவையொன்றை இனங்கண்டுள்ள வறுமை நிலையை ஒழித்தல், சௌபாக்கியம் மற்றும் போசாக்கு நிலைமையை மேம்படுத்துவது, சிறுநீரக நோயை கட்டுப்படுத்தல், போதைவஸ்து நிவாரணம், சுற்றாடல் பாதுகாப்பு, நீர் மூலங்களைப் பாதுகாத்தல் போன்ற அமைச்சு நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற விசேட செயற்றிட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாகவும் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் அதி உன்னத பங்களிப்பை செய்கின்றது. இந்தச் செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்காக 4 சதவீத நிர்வாக கொடுப்பனவொன்றை அமைச்சினால் பெருந்தோட்ட அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்படுகின்றது.

### 1.6.2.5. 2019.12.31 திகதியில் மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை

| | நிகழ்ச்சித்திட்டம் | வழங்கப்பட்டுள்ள தொகை (ரூ.மி) |
|---|---|---|
| 1 | கிராமிய பிரதேசங்களில் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல். | 19.07 |
| 2 | பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்திச் செயற்றிட்டம் | 149.43 |
| 3 | தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 785.46 |
| 4 | இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின்படி மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (முகாமைத்துவக் கட்டணம்) | 43.54 |
| | முழு மொத்தம் | 997.51 |

## 1.6.3 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்

"சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்" 2005 ஆம் ஆண்டில், 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆரம்பம் முதல் இதுவரை பலதரப்பட்ட அமைச்சுக்களின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டுள்ளது.

- தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு (2005 ஆம் ஆண்டு)
- இளைஞர் அலுவல்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு (2006 - 2009 ஆண்டுகள்)
- கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு (2010 - 2014 ஆம் ஆண்டுகள்)
- சமூக பொருளாதார, நலன்புரி மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சு (2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரை)
- மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு (2015 செப்தெம்பர் மாதம் முதல் 2019 டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி வரை)
- சமூக வலுவூட்டல்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு (2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் இது வரை)

### 1.6.3.1. சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் குறிக்கோள்கள்

(அ) இலங்கையின் சகல சமூகங்களுக்கும் இடையில் சமாதானம், சகவாழ்வு, புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தல்.

(ஆ) இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சமூக மீள் கலப்பினை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

(இ) இலங்கையர்கள் மத, கல்வி, தொழில்சார், சமூக, அரசியல், பொருளாதார, அழகியல்சார் மற்றும் பௌதீக அபிவிருத்தியை மேம்படுத்தல்.

(ஈ) இலங்கையர்களின் பொருளாதார, அரசியல், கல்வி, கலாசார, சமூக மற்றும் அழகியல் துறைகளில் அறிவு மற்றும் புரிந்துணர்வை கட்டியெழுப்புதல்.

(உ) பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பாதிப்புக்கு உள்ளான ஏதேனும் நபர்களின் வதிவிடத்தை திருத்தியமைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் உள்ளடங்கலான வாழ்வாதார நிலைமைகளை மேம்படுத்தல்.

(ஊ) பொருத்தமான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு இலங்கையர்களை தைரியப்படுத்தல்.

(எ) மன்றத்தின் நோக்கங்களுக்கு சமமான நோக்கங்களைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

(ஏ) மன்றத்தின் குறிக்கோள்களுக்குச் சமமான எந்தவொரு பணியொன்றில் ஈடுபட்டுள்ள ஏதேனும் நபருக்கு நிதி அல்லது வேறு நன்கொடைகளை வழங்குதல்.

(ஐ) இலங்கையினுள் மற்றும் வெளிநாடுகளில் பொருளாதார, அரசியல், கல்வி, கலாசார மற்றும் சமூகத் துறைகள் பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

(ஒ) இலங்கையர்களுக்கிடையில் மனித உரிமைகள், கடமைகள் மற்றும் நீதிப் பிரவேசம் போன்றவை தொடர்பிலான அறிவை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.


(ஓ) இலங்கையர்களின் விளையாட்டு மற்றும் களியாட்ட இயலுமைகளை மேம்படுத்துவது தொடர்பாக போதியளவான வசதிகளை வழங்குதல்.

(ஔ) மன்றத்தின் குறிக்கோள்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் மற்றும் பொருத்தமானது என மன்றம் கருதுகின்ற வேறு ஏதேனும் பணி தொடர்பாக, ரம்பொடை தொண்டமான் கலாசார நிலையம், நோர்வூட் தொண்டமான் விளையாட்டு மைதான கட்டிடத்தொகுதி மற்றும் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தை நடாத்திச் செல்லல் மற்றும் உபயோகப்படுத்தல்.

எனினும், ரம்பொடை தொண்டமான் கலாசார நிலையம் மற்றும் ஹட்டனில் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் சில அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக பயன்படுத்தல் கூடாது.

மேலே குறிப்பிட்ட சகல குறிக்கோள்கள் அல்லது அவற்றில் ஏதேனும் குறிக்கோளை முதனிலைப்படுத்திக் கொள்ளல் தொடர்பாக தேவையான அல்லது ஒத்துழைப்பாக இருக்கக் கூடிய பிற சகல செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

## சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் ஒருங்கிணைப்பு குறிப்பு



### 1.6.3.2 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் நிதிச் செயலாற்றுகை

அமைச்சினால் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் மூலதன மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் ரூ. 152 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிறைவில் அதன் நிதிச் செயலாற்றுகை ரூ. 121 மில்லியன்களாகும். மொத்த நிதிச் செயலாற்றுகை 99 சதவீதமாகும்.

| செலவின விடயங்கள் | ஒதுக்கிய நிதி ஏற்பாடு (ரூ.மி) | நிலையங்களுக்கான செலவினங்கள் (ரூ.மி) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிரஜாசக்தி செயற்பாட்டு அலகு | பிரஜாசக்தி நிலையங்கள் | TVTC ஹட்டன் | ரம்பொடை கலாசார நிலையம் | நோர்வூட் விளையாட்டு கட்டிடத்தொகுதி | 2019 ஆண்டுக்கான மொத்த செலவினம் (ரூ.மி) |
| பிரயாணம் மற்றும் போக்குவரத்து | 0.12 | - | - | 0.03 | - | - | 0.03 |
| எழுது கருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 2.50 | - | - | 1.08 | - | - | 1.08 |
| எரிபொருள் | 0.55 | - | - | 0.21 | - | - | 0.21 |
| வாகன சேவை மற்றும் பராமரிப்பு | 0.65 | - | - | 0.05 | - | - | 0.05 |
| கட்டட பராமரிப்பு | 0.12 | - | - | 0.25 | - | - | 0.25 |
| இயந்திரசாதன மற்றும் உபகரண பராமரிப்பு | 0.20 | - | - | 0.65 | 0.24 | - | 0.89 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்பு | 0.52 | 0.07 | - | 0.14 | 0.04 | 0.02 | 0.27 |
| நீர் மற்றும் மின்சாரம் | 2.90 | - | 0.33 | 0.67 | 0.57 | 0.04 | 1.60 |
| பதவியணி செலவீனம் | 98.65 | 7.29 | 57.10 | 23.52 | 4.48 | 3.50 | 95.90 |
| உணவு மற்றும் சீருடைகள் | 6.85 | - | - | 7.76 | - | - | 7.76 |
| பயிற்சிப் பொருட்கள், சீருடைகள், ஆடை அணிகலன்கள் | 3.10 | - | - | 4.09 | - | - | 4.09 |
| வாடகை மற்றும் வரி | 0.10 | - | - | 0.06 | 0.04 | - | 0.09 |
| சமூக மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேறு நிகழ்வுகள் | 0.98 | - | 0.62 | 0.45 | - | 0.03 | 1.10 |
| பாதுகாப்பு உள்ளடங்கலாக வேறு மீண்டெழும் செலவினங்கள் | 4.76 | 0.34 | 2.25 | 2.87 | 1.25 | 1.26 | 7.98 |
| மொத்தம் | 122.00 | 7.71 | 60.31 | 41.83 | 6.61 | 4.84 | 121.29 |

### 1.6.3.3. ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம்

இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் வருடமொன்றுக்கு 400 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கக் கூடிய இட வதிகள் காணப்படுவதுடன் பயிற்சி தொடர்பாக பங்குபற்றுகின்ற சகல மாணவர்கள் தொடர்பாக தேவையான வதிவிட வசதிகள் மற்றும் உணவு குடிபானம் என்பன இலவசமாக வழங்கப்படும்.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் ஊடாக தற்பொழுது தொழிற்பயிற்சி பாடநெறிகள் 13 செயற்படுத்தப்படுவதுடன் இதுவரை வருடாந்தம் 5 பாடநெறிகள் 06 மாத பயிற்சி பாடநெறிகள் 07 உள்ளடங்குவதுடன் மோட்டார் சைக்கிள் தொழிற்பயிற்சி கால எல்லை 07 மாதங்களாகும். அரை வருட பயிற்சி பாடநெறி தொடர்பாக வருடமொன்றுக்கு இரண்டு தொகுதிகளின் கீழ் பயிற்சிக்காக பயிலுனர் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிற்சிப் பாடநெறி தொடர்பாக தேவையான நிதி ஏற்பாடுகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த பாடநெறிகள் கீழ் உள்ளவாறாகும்.

### 1.6.3.4. 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி பாடநெறிகள்

| இல | பாடநெறி | பாடநெறிக் காலம் |
|---|---|---|
| 1. | மோட்டார் வாகன தொழில்நுட்பத் திறன் | ஒரு வருடம் |
| 2. | மின் தொழில்நுட்பவியலாளர் | ஒரு வருடம் |
| 3. | இயந்திரசாதனங்கள் | ஒரு வருடம் |
| 4. | அலுமீனியம் செயலாக்கம் | 06 மாதங்கள் |
| 5. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் | 06 மாதங்கள் |
| 6. | வீட்டு மின்சார உபகரண திருத்தம் | 06 மாதங்கள் |
| 7. | மோட்டார் சைக்கிள் தொழில் நுட்பவியாளர் | 06 மாதங்கள் |
| 8. | ஒட்டும் தொழில் நுட்வியலாளர் (வேல்டர்) | 06 மாதங்கள் |
| 9. | தச்சு தொழில் நுட்பம் | 06 மாதங்கள் |
| 10. | தையல் திறன் | 06 மாதங்கள் |
| 11. | ஹோட்டல் முகாமை | 06 மாதங்கள் |

இங்கு பயிற்சி பெறும் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்கில் ஆங்கிலக் கல்வியும் வழங்கப்படுவதுடன் சகல பாடநெறிகள் நிறைவில் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன் பாடநெறியை உரிய பிரகாரம் நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### 1.6.3.5 2019.12.31 ஆம் திகதியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் பற்றிய விபரம்

| இல | பாடநெறி | பாடநெறிகாலப் பகுதி | நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சியை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மோட்டார் வாகன தொழில்நுட்பத் திறன் | ஒரு வருடம் | 1 | 20 | 25 | 12 |
| 2. | மின் தொழில்நுட்பம் | ஒரு வருடம் | 1 | 20 | 16 | 12 |
| 3. | இயந்திரசாதனங்கள் | ஒரு வருடம் | 1 | | | 7 |
| 4. | அலுமீனியம் செயலாக்கம் | 06 மாதங்கள் | 2 | 50 | 24 | 25 |
| 5. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் | 06 மாதங்கள் | 2 | 40 | 17 | 22 |
| 6. | வீட்டு மின்சார உபகரண திருத்தம் | 06 மாதங்கள் | 2 | 50 | 11 | 17 |
| 7. | மோட்டார் சைக்கிள் தொழில் நுட்பவியாளர் | 06 மாதங்கள் | 2 | 40 | 26 | 35 |
| 8. | ஒட்டும் தொழில் நுட்வியலாளர் (வேல்டர்) | 06 மாதங்கள் | 2 | 50 | 21 | 9 |
| 9. | தச்சு தொழில்நுட்பம் | 06 மாதங்கள் | 2 | 40 | 13 | 10 |
| 10. | தையல் திறன் | 06 மாதங்கள் | 2 | 40 | 38 | 49 |
| 11. | ஹோட்டல் முகாமைத்துவம் | 06 மாதங்கள் | 2 | 40 | 20 | 40 |

### 1.6.3.6. ரம்பொடையில் தாபிக்கப்பட்டுள்ள தொண்டமான் கலாசார நிலையம்

குறைந்த வசதிகளைக் கொண்ட பெருந்தோட்ட சமுதாயத்தினரின் கலாசார மற்றும் கலைத்திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு முதல் கர்நாடக சங்கீதம், வீணை மீட்டல், மென்பொருள் மற்றும் வயலின் வாசிப்பு பற்றி விரிவுரையாளர் ஒருவரின் முழு நேர மேற்பார்வையின் கீழ் பாடநெறிகள் நடாத்தப்பட்டு வந்தபோதும் அந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. மேலும் பலதரப்பட்ட விழாக்கள் மற்றும் கலாசார நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் தொடர்பாக மண்டப வசதிகள் வழங்குதல் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.. இதன் ஊடாக 2019 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்டுள்ள வருமானம் ரூ. 0.25மில்லியன்கள் ஆகும்.

### 1.6.3.7. நோர்வூட் இல் தாபிக்கப்பட்டுள்ள தொண்டமான் விளையாட்டுத் தொகுதி

மேற்படி விளையாட்டுத் தொகுதி 2005ஆம் ஆண்டில் சௌமியமூர்த்தி தொண்டமான் மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் 2011ஆம் ஆண்டில் ரூ. 25 மில்லியன் செலவிடப்பட்டு இந்த விளையாட்டு தொகுதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டு அரங்கால் பயன்பெறும் இளைஞர் யுவதிகளின் உடல் உள அபிவிருத்தி கருதி உடற்பயிற்சித் தொகுதி ஒன்றை அமைத்துள்ளதுடன் டெனிஸ், பெட்மின்டன், வலைப்பந்து மற்றும் கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களுக்காக உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றும் கிரிக்கெட் விளையாடுவதற்கு திறந்த விளையாட்டரங்கு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அருகில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் பல பலதரப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் செயற்பாடுகளை நடாத்துவதற்கு இவ்விளையாட்டுத் தொகுதியைப் பயன்படுத்துகின்றனர்.

### 1.6.3.8 பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்றிட்டம் (E- KIOSK Centres)

தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பத்தை பரவலாகப் பயன்படுத்தும் குறைந்த வரப்பிரசாதம் பெற்றுள்ள மலையக மக்களுக்கு பூரணமான மற்றும் பரந்தளவிலான சமூக பொருளாதார அபிவிருத்தியை உரித்தாக்கிக்கொடுப்பது இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். பெருந்தோட்ட பகுதிகளை உள்ளடக்கி 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பிரஜாசக்தி (E- KIOSK) அபிவிருத்தி செயற்றிட்டம் நுவரெலியா, பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 44 பிரஜாசக்தி நிலையங்கள் ஊடாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிராமிய மற்றும் தோட்டப் பிரதேசங்களில் முதலாம் ஆண்டு தொடக்கம் உயர்தர மாணவர்கள் வரையிலும் பாடசாலை இடைவிலகிய இளைஞர் யுவதிகளுக்கும் தகவல் தொழிநுட்ப தொடர்பாடல் கல்வியை வழங்குவதை நோக்காகக் கொண்டு இந்நிலையங்கள் இயங்கி வருகின்றன. கல்வி நோக்கங்களுக்காக இணைய வசதிகள் தேவைப்படுபவர்களுக்காக இலவசமாக அச்சேவைகளை வழங்குவதற்கும், நூலக வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் வாசிப்பு திறனை விருத்தி செய்வதற்கும் கவிதை நாடகம், பேச்சுப் போட்டிகள் ஊடாக அவர்களின் திறனை வளர்ப்பதற்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே பல்வேறு தலைப்புக்களின் கீழ் செயலமர்வுகள், விரிவுரைகளும் மற்றும் கலாசார நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோன்று, சுகாதாரம், பெண்களை வலுவூட்டல், சுற்றாடல் பிரச்சினைகள், சுய தொழில், தோட்டத் துறையில் சிறுவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகள், ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள் (கண்காட்சி, பாடசாலைக் கல்வியை இடையில் விட்டுச் செல்வதனை குறைத்தல் போன்றன) போன்ற பலதரப்பட்ட தலைப்புக்களின் ஊடாக தோட்டபுற சமூகத்தை அறிவுறுத்துதல் தொடர்பாக பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக பலதரப்பட்ட சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் விசேடமாக ஏனைய சமூகங்களுடன் சமமாக வாழ்வதற்காக பெருந்தோட்ட சமூகத்தை மாற்றியமைப்பதற்கும் மற்றும் அவர்களுடைய வருமானத்தை (சுயதொழில்) அதிகரிப்பதன் மூலம் தன்னிறைவை அடைதல் தொடர்பாக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.6.3.9 மாவட்ட மட்டத்தில் பிரஜா சக்தி செயற்பாட்டு நிலையங்களை அமைத்தல்

| மாவட்டம் | பிரஜா சக்தி செயற்பாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள தோட்டப் பிரதேசங்கள் | | | |
|---|---|---|---|---|
| நுவரெலியா | 1 வனராஜ்<br>2 ப்ரவுன்ஸ்விக்<br>3 கரோலினா<br>4 டிலிகுல்ரி | 5 டெஸ்போட்<br>6 க்லேசோ<br>7 வடகொட<br>8 டன்சினன் | 9 வோல்டிமார்<br>10 லிட்ஸ்டேல்<br>11 வெதமுள்ள<br>12 ஹங்கரபிடிய | 13 பீரு<br>14 கொடகல<br>15 டயகமவத்த கிழக்கு |
| பதுளை | 1 புனகல<br>2 ஹிந்தகல<br>3 யூரி | 4 அடாவத்த<br>5 ஹொப்டன் | 6 வெலிமட<br>7 ரொபேட் | 8 க்லேனோர்<br>9 சாரனியா |
| இரத்தினபுரி | 1 பலான்கொட<br>2 எஹலியகொட | 3 மாதம்பே | 4 ஹுனுவெல்ல | 5 ஹேஸ்<br>6 ஹவுபே |
| கண்டி | 1 மெல்பரீட்<br>2 டக்வரி | 3 கலஹ<br>4 கெலேபொக்க | 5 பானதும்பர | 6 வெஸ்ட்ஹோல் |
| கழுத்துறை | 1 மில்லகந்த | | | |
| மொனராகலை | 1 குமாரவத்த | | | |
| காலி | 1 திவிதுர | | | |
| மாத்தறை | 1 கிருவானாகங்க | | | |
| கேகாலை | 1 அடாலே | 2 மியனவிட | 3 களணி | 4 மொரலிஓய |
| மாத்தளை | 1 எல்கடுவ | | | |

பிரஜாசக்தி நிலையங்கள் (E-KIOSK Centres) 45 இல் 44 செயற்படும் நிலைமையில் காணப்படுவதுடன் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஹவுபே பிரஜா சக்தி நிலையம் தற்பொழுது இயங்குவதில்லை.

### 1.6.3.9 பிரஜாசக்தி நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஏனைய செயற்பாடுகளின் சுருக்கம்.

| இல | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிககை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ICT நிகழ்ச்சித்திட்டம் | 16 | 824 |
| 2 | சமூக செயற்பாடுகள் | 10 | 483 |
| 3 | கொண்டாட்டங்கள் | 13 | 418 |
| 4 | அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 34 | 1904 |
| 5 | மருத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 684 |
| 6 | பயிற்சி /சுயதொழில் | 28 | 963 |
| 7 | காபனிக் பயிர்ச் செய்கை | 8 | 286 |
| 8 | பாடசாலை கருத்தரங்குகள் | 9 | 587 |
| 9 | திறன் அபிவிருத்தி | 3 | 265 |
| 10 | விளையாட்டுச் செயற்பாடுகள் | 3 | 121 |
| 11 | பெண்களை வலுவூட்டல் | 7 | 328 |
| | முழு மொத்தம் | 141 | 6,863 |

## 1.6.4 தோட்ட துறையின் இளைஞர் யுவதிகள் தொடர்பாக சுயதொழில் தொடர்பாக கடன் வழங்கும் சுழற்சி கடன் நிதியம்.

உயர் வறுமை பெறுமானத்தை வெளிப்படுத்துகின்ற பெருந்தோட்ட சமூகத்தை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் இந்த அமைச்சின் முக்கிய குறிக்கோளாகும். விசேடமாக ஊழியப் படையில் பெரும் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர் வகுதியினரை சமூக வலுப்படுத்துவதற்காக அமைச்சினால் பலதரப்பட்ட செயற்றிட்டங்கள் பல அமுல்படுத்தப்படுகின்றன.

அதன் பிரகாரம் பெருந்தோட்டத் துறையில் இளைஞர் யுவதிகளின் தொழில்வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் நோக்கில் சுய தொழில்வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக அவர்களை ஈடுபடுத்துவதற்கு அமைச்சு நேரடியாக நடவடிக்கை எடுக்கின்றது. திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி தொடர்பாகத் தேவையான அறிவு, தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சியை வழங்குதல், உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குதல், சுயதொழில் வாய்ப்புக் கடன்களை வழங்குதல் போன்றவற்றின் ஊடாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி அவர்களை சமூகத்திற்கு பயனுடைய திருப்திகரமான இளைஞர் வகுதியினராக உருவாக்குவதை முன்னிலைப்படுத்தி இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதுடன் பொருத்தமான சுயதொழில்வாய்ப்புக்களை இனங்காணல், இளைஞர் யுவதிகளை அறிவுறுத்துவதன் ஊடாக அவர்களுக்கு சுயதொழில்வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல் என்பன அவற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஹட்டன் நகரில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தை தொடர்புபடுத்தி இளைஞர் யுவதிகள் தொடர்பாக தமது வாழ்வாதார வழிகளை ஏற்பாடு செய்து கொள்வதற்குத் தேவையான தொழில்சார் அறிவு மற்றும் பயிற்சி வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. பெருந்தோட்ட சமூகத்தில் நிலவுகின்ற வறுமை நிலைமையின் கீழ் செயற்பாட்டு பயிற்சிகளை மேற்கொண்ட உடன் சுயதொழில் வாய்ப்புக்களை ஆரம்பிக்க முடியாததுடன் அது தொடர்பாக மாற்றுவழியொன்றாக சுயதொழில் வாய்ப்புக்களை ஆரம்பித்தல் தொடர்பாக நிதியுருவாக்க வழியொன்றாக இந்த சுழற்சி நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் நேரடி தலையீட்டுடன் இலங்கை வங்கியினால் இந்த சுழற்சிக் கடன் நிதியம் நடாத்தப்பட்டு வருகின்றது. இது இரண்டு கட்டங்களாக அமுல்படுத்தப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது கட்டத்தின் கீழ் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் பெருந்தோட்ட துறையை பிரதானமாகக் கொண்டு இளைஞர் யுவதிகள் 35 பேர் தொடர்பாக கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 1.6.4.1 கடன் தொகை தொடர்பாக பயன்பெறுனர்கள் தெரிவு செய்யப்படும் விதம்

எதிர்பார்க்கப்படும் தொழில்முயற்சியாளர் பெருந்தோட்ட சமூகத்துக்குரிய 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். முதலாவதாக, விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்படுகின்ற கடன் விண்ணப்பப்படிவம் பிரதேச கிராம அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டு உரிய பிரதேச செயலாளர் அலுவலகத்தின் பிரதேச செயலாளரின் சிபாரிசைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சிற்கு அனுப்பப்படும் அமைச்சு அலுவலர்களினால் பொருத்தமான விண்ணப்பதாரிகள் சமூக கலந்துரையாடல் ஊடாக தெரிவு செய்யப்பட்டு அந்த விண்ணப்பப் பத்திரங்கள் அமைச்சு சிபாரிசுடன் இலங்கை வங்கியின் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்படும். வங்கியால் தோட்ட துறையில் சுயதொழில் வாய்ப்பு தொடர்பான கடன் தொகை உடன்படிக்கையின் பிரகாரம் தேவைப்பாடுகளை நிறைவு செய்கின்ற விண்ணப்பதாரிகளுக்கு வங்கியால் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு பயன்பெறுனர் தொடர்பாக வழங்கப்படுகின்ற உச்ச கடன் தொகை ரூ. 100,000 ஆக இருப்பதுடன் சுயதொழில் வாய்ப்பின் தன்மைக்கு ஏற்ப கடன் தொகை முழுமையாக அல்லது கட்டம் கட்டமாக வழங்கப்படும். இலங்கை வங்கியின் உரிய பிரதேச வங்கியினால் சுயதொழில்வாய்ப்பு பற்றிய பின்னூட்டல் செய்தல் ஒரு கட்ட கடன் தொகை விடுவிக்கப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட கடன் வழங்கும் போது முன்னைய கட்ட அமுல்படுத்தல் முன்னேற்றம் தொடர்பில் தகவல்களை தேடிப் பார்த்தல் மேற்கொள்ளப்படும்.

## 1.7. வெளிநாட்டு நன்கொடை கிடைக்கின்ற செயற்றிட்டங்களின் தகவல்கள்

### 1.7.1 செயற்றிட்டத்தின் பெயர் :

#### 1.7.1.(அ) இந்திய நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்புச் செயற்றிட்டம்

மண்சரிவு, தீப்பிடித்தல் போன்ற இடர்களிலிருந்து பாதிப்புக்கு உள்ளாகின்ற பெருந்தோட்ட சமூகம் தொடர்பாக முன்னுரிமை வழங்கி முழுமையாக நன்கொடை அடிப்படையின் கீழ் வீட்டுத் தொகுதிகள் 14,000 வழங்குவதற்கு இந்திய அரசினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது இரண்டு கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுவதுடன் முதலாம் கட்டத்தின் (Stage 01) கீழ் வீட்டுத் தொகுதிகள் 4,000 மற்றும் இரண்டாவது கட்டத்தின் (Stage 02) கீழ் வீட்டுத் தொகுதிகள் 10,000 என்பன நிர்மாணிக்கப்படவுள்ளன. வீடொன்றின் பெறுமதி ரூபா ஒரு மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இச்செயற்றிட்டம் தொடர்பாக, வீடொன்று தொடர்பாக இந்திய அரசினால் ரூ. 950,000.00 தொகை, உரிய பெருந்தோட்ட கம்பனியால் ரூ. 30,000.00 தொகை மற்றும் பயன்பெறுனரினால் ரூ. 20,000.00 பெறுமதியான உழைப்புப் பங்களிப்பும் வழங்கப்படுகின்றது. இந்த வீடமைப்பு செயற்றிட்டம் தொடர்பாக தேவையான குடிநீர் வசதிகள், பிரவேச பாதை உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக முதலாம் கட்டத்தில் வீடமைப்பு தொடர்பாக ஒரு வீட்டு அலகிற்கு ரூ. 120,000.00 தொகையும் மற்றும் அதன் இரண்டாம் கட்டம் தொடர்பாக ரூ. 150,000.00 ஆக அமையும் வகையில் இலங்கை அரசின் ஊடாக நிதி ஒதுக்கீடு வழங்குகின்றது.

#### 1.7.1. (அ) 1 இந்திய நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்புச் செயற்றிட்டம் - முதலாம் கட்டம் (Stage I) - 4000 வீடுகள்

2016.01.08 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்திற்கும் மற்றும் இலங்கையில் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் இணைந்து 2016.04.01 ஆம் திகதி நடைபெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தோட்ட சமூகம் தொடர்பாக படிமுறையின் ஊடாக (Phase) இந்திய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் தோட்ட ஊழியர் கூட்டுறவு சங்கம் (EWHCS) ஊடாக வீட்டுத் தொகுதிகள் 4,000 நிர்மாணிக்கப்படுகின்றன. அதன் பிரகாரம் 2019.12.31 ஆம் திகதியாகும் போது

- கட்டம் I (Phase I) - இதன் கீழ் 1,057 வீடுகளின் நிர்மாணிப்பு முழுமையாக நிறைவு செய்யப்பட்டு அவற்றில் 699 வீடுகள் பயன்பெறுநர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.
- கட்டம் II (Phase II) - இதன் கீழ் 2,943 வீடுகள் பலதரப்பட்ட நிர்மாணிப்புக் கட்டங்களில் நிர்மாணிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### 1.7.1.(அ) II இந்திய நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்புச் செயற்றிட்டம் - இரண்டாம் கட்டம் (Stage II) - 10,000 வீடுகள்

II ஆம் கட்டத்தின் கீழ் இந்திய அரசினால் 10,000 புதிய வீடுகள் பெருந்தோட்ட சமூகத்திற்கு வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது. அதற்கு உரிய அமைச்சரவையின் தீர்மானம் 2018.02.16 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன்

இலங்கையில் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் 2018.08.12 ஆம் திகதி அதற்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது. அதன் பிரகாரம் பதுளை, ஹட்டன், நுவரெலியா, கண்டி, கேகாலை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய ஏழு தோட்ட வலயங்களிலும் உள்ள சமூகம் தொடர்பாக இரண்டு கட்டங்களில் 10,000 வீடுகளை தோட்ட ஊழியர் கூட்டுறவு சங்கத்தின் ஊடாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- கட்டம் I (Phase II) - இதன் கீழ் 5,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் செயற்றிட்ட பட்டியல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- கட்டம் II (Phase II) - இதன் கீழ் 5,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் செயற்றிட்டப் பட்டியல் இனங்காணப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது.

### 1.7.1 ஆ) பங்களிப்பு பிரதிநிதித்துவ நிறுவனம் : இந்திய அரசாங்கம்

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுவது இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட கீழ் குறிப்பிட்ட செயற்படுத்தும் நிறுவனத்தின் ஊடாகவாகும்.

1. ஐக்கிய நாடுகளின் மனித குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் (UN-Habitat)
2. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சமமேளனம் (IFRC)
3. மானுடவியலுக்கான தங்குமிடம் (Habitat for Humanity)
4. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NHDA)

### 1.7.1 இ) செயற்றிட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் - ரூபா 15,280 மில்லியன்கள்

இந்திய நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்பு செயற்றிட்டத்தின் கட்டம் I (4000 வீடுகள்)

இந்திய நன்கொடை ரூபா 3,800 மில்லியன்கள்
அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 480 மில்லியன்கள்

இந்திய நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்பு செயற்றிட்டத்தின் கட்டம் II (10,000 வீடுகள்)

இந்திய நன்கொடை ரூபா 9,500 மில்லியன்கள்
அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 1,500 மில்லியன்கள்

### 1.7.1 ஈ) செயற்றிட்ட கால எல்லை - 08 வருடங்கள்
**முதலாவது கட்டம் (Stage I)**

இதன் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற செயற்றிட்ட கால எல்லை 04 வருடங்களாக இருப்பதுடன் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான கால எல்லையாகும்.

எனினும், வீடமைப்பு தொடர்பாக பொருத்தமான காணிகளை இனங்கண்டுகொள்ளல், சுவீகரித்தல், அளத்தல், வீடமைப்பு நிர்மாணம் தொடர்பாக காணியை தயார் செய்தல் போன்றவற்றுக்கும் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையை பெற்றுக் கொள்ளல் (NBRO அறிக்கை), போன்ற செயற்பாடுகள் தொடர்பாக எதிர்பார்த்த கால எல்லையிலும் பார்க்க நீண்ட காலமொன்று கடந்தமையும், காலநிலை மற்றும் வானிலை போன்ற கட்டுப்படுத்த முடியாத காரணிகளின் காரணமாக நிர்மாணிப்புக்கள் தாமதமடைந்தமை போன்ற விடயங்களை காரணமாகக் கொண்டு உரிய கால எல்லையினுள் செயற்றிட்டத்தை நிறைவு செய்வதற்கு இயலாது போனது. 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் போது 1,057 வீடுகளின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் பலதரப்பட்ட நிர்மாணிப்பு கட்டங்களில் காணப்படும் எஞ்சிய வீடுகள் 2,943 இன் நிர்மாணிப்புக்கள் 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டம் (Stage II)
இரண்டாம் கட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 10,000 வீடுகள் தொடர்பாக செயற்றிட்ட கால எல்லை 6 வருடங்களாக இருப்பதுடன் அது 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1.7.2 அ) செயற்றிட்டத்தின் பெயர் :**
**தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்.**

ஹட்டனில் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் தொடர்பாக புதிய மூன்று மாடி கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கும் தற்பொழுது உள்ள கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்கும் சந்தை கேள்விகளுக்கு ஏற்ற வகையில் புதிய பயிற்சி பாடநெறிகளை உருவாக்குவதற்கும் அதற்குத் தேவையான புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதையும் நோக்காகக் கொண்டு இந்திய அரசாங்கத்தினால் இச்செயற்றிட்டம் தொடர்பாக நிதி உதவி வழங்கப்படுகின்றது.

அது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் 2017.05.02 ஆம் திகதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை 2017.09.20 ஆம் திகதி இலங்கையில் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

**1.7.2. ஆ) பங்களிப்பு பிரதிநிதித்துவ நிறுவனம் : இந்திய அரசாங்கம்**

**1.7.2. இ) செயற்றிட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் : ரூ. 219.75 மில்லியன்கள் :- இந்திய நன்கொடை ரூ. 199 மில்லியன்கள்**
அரசாங்கத்தின் பங்களிப்பு ரூ. 20.75 மில்லியன்கள் (வரி உள்ளடங்கலாக ஏனைய தேவைகள் தொடர்பாக)

**1.7.2 ஈ) செயற்றிட்ட கால எல்லை : 03 வருடங்கள்**
2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான மூன்று வருட கால எல்லை இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

# 02. ஆம் அத்தியாயம்

## முன்னேற்றம் மற்றும் தூரநோக்கு

## 2.1. விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் தூரநோக்கு

### 2.1.1. விசேட வெற்றிகள்

- **பெருந்தோட்ட சமூகம் தொடர்பான புதிய கிராம எண்ணக்கருவை அமுல்படுத்துவதற்காக "புதிய கிராம அதிகாரசபை" யை ஆரம்பித்தல்.**
  இந்நாடு வெளிநாட்டு செலாவணியை உழைப்பதற்காக பெருந்தோட்டப் பயிர்கள் பொருளாதாரத்தின் முன்னோக்கிச் செல்லும் தோட்டத்துறை மக்களில் 65 சதவீதத்திற்கு அதிகமான அளவினர் இன்னும் மிகவும் குறைந்த அடிப்படை வசதிகளுடன் கூடிய பெரக்க கலாசாரத்திற்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட லயன் வீடுகளை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்கின்றதுடன் அவ்வாறான வாழ்க்கை போக்கின் கீழ் அவர்கள் முகங்கொடுக்கின்ற உடல், உள மற்றும் சமூக இடர்பாடுகளை கவனத்திற் கொண்டு புதிய கிராம எண்ணக்கருவின் ஊடாக பெருந்தோட்டச் சமூகத்திற்கு வீடு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை தயார் செய்து கொடுத்து ஏனைய இனக்குழுக்களுடன் சமமாகவும் சுய கௌரவத்துடனும் சமூக தரத்தைக் கொண்டவர்களாக ஆகுவதை இலக்காகக் கொண்டு இந்த அமைச்சின் தலைமையில் தாபிக்கப்பட்ட புதிய கிராம அதிகார சபையின் பணிகளை ஆரம்பிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் இந்த அமைச்சுக்கு இயலுமை இருந்தது.

  அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 07 ஆம் திகதி பிரதான நிறைவேற்று அலுவலரான பணிப்பாளர் நாயகம் மற்றும் 07 நபர்களைக் கொண்ட முகாமைத்துவ சபையைக் கொண்ட புதிய கிராம அதிகாரசபையின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மத்திய மாகாணத்தில் சிறந்த பயிற்சி வழங்குனருக்கான மாகாண விருதில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டமை.**
  2019 யூலை 17 ஆம் திகதி BMICH இல் நடைபெற்ற இலங்கையின் தேசிய தொழிற்பயிற்சி சிறப்பு விருது வழங்கும் விழாவில் மத்திய மாகாணத்தின் சிறந்த பயிற்சி வழங்குனருக்கான மாகாண விருது வழங்கலில் இரண்டாவது இடத்தை ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் பெற்றுக் கொண்டது.

### 2.1.2. சவால்கள் மற்றும் எதிர்கால குறிக்கோள்கள்.

பெருந்தோட்ட பிரதேசங்களில் நிலவுகின்ற வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதும் அப்பிரதேசங்கள் தொடர்பாக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது போன்ற சவால்களை வெற்றி கொள்வதற்காக அமைச்சினால் கடந்த காலங்களின் போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

#### 2.1.2.1. பெருந்தோட்டப் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கொள்கை

பெருந்தோட்டப் பிரதேசங்களில் வீதி, மின்சாரம், நீர் வசதிகள் போன்ற மிகவும் சிறந்த வாழ்வாதார நிலைமையொன்றை உருவாக்குவதற்கு உதவி புரியும் உட்கட்டமைப்பு வசதிகள் வரையறைக்குட்பட்டவையாகும். பெருந்தோட்டத் துறையிலிருந்து தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கிடைக்கின்ற பங்களிப்பு மிகவும் உயர் மட்டத்தில் காணப்பட்ட போதும் இப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக குறைந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பெருந்தோட்டச் சமூகத்தின் வாழ்வாதார நிலைமையை கட்டியெழுப்புவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அத்தியாவசியமாக இருப்பதுடன் அரசினால் சௌபாக்கியமான செயற்பணி கொள்கை ஊடாகவும் அந்தத் துறை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி தொடர்பாக அமைச்சினால் பிரதான செயற்றிட்டங்கள் பல அமுல்படுத்தப்பட்டன.

**வீதி -**

பெருந்தோட்டப் பிரதேசங்களில் விசேடமாக பாடசாலை பிள்ளைகள் மற்றும் நோயாளிகளின் பிரயாண வசதி தொடர்பாக தோட்ட வீதிகளை அபிவிருத்தி செய்தல் அத்தியாவசியமாகும். இந்த வீதிகளில் அனேகமானவை பிரதேச சபைக்கு உரிய வீதிகளாக இருப்பதுடன் அந்த நிறுவனங்களுக்கு நிதி வளங்கள் பற்றாக்குறையடைந்தமையின் காரணமாக வீதிப் பராமரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அதன் காரணமாக மக்கள் பிரதான வீதிகளுடன் தொடர்புபடுகின்ற இந்த இணைப்பு வீதிகள் அமைச்சினால் மேம்படுத்தப்படும்.

**மின்சாரம் -**

பெருந்தோட்டப் பிரிவின் வீட்டு மின் பயன்பாடு தேசிய மட்டம் மற்றும் ஒப்பீடு செய்யும் போது குறைவான சதவீதத்தில் காணப்படுகின்றது. எதிர்வரும் சில வருடங்களில் அந்த நிலைமை உயர் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு மின்சார சபையின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற சகல புதிய வீடுகள் ஒவ்வொன்றுக்கும் தேவையான மின் சக்தி வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**நீர் விநியோகம் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு வசதிகள் -**

குடிநீர் விநியோகம் மற்றும் துப்பரவு ஏற்பாடு தொடர்பாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய துறைகளாக உள்ளன. மலைநாட்டுப் பிரதேசங்களாக இருப்பதனால் அனேகமான பிரதேசங்களில் குடிநீர் இருக்கின்ற போதிலும் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கின்றமையை உறுதிப்படுத்தல் வேண்டும். அந்த எதிர்கால குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் மற்றும் பிரதேச சபை ஊடாக பாதுகாப்பான குடிநீர் விநியோகம் தொடர்பாக அமைச்சு முயற்சி எடுத்துள்ளது.

### 2.1.2.2. பெருந்தோட்ட ஊழியர் தொடர்பாக வீடுகளை விநியோகிக்கும் கொள்கை

வதிவிடம் தொடர்பிலான குறிகாட்டிகளை கவனத்திற் கொள்ளும் போது மிகவும் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ள மக்கள் குழுவாக பெருந்தோட்டச் சமூகத்தை கருத முடியும். பெருந்தோட்டச் சமூகம் வாழ்கின்ற வீடுகளில் 58 சதவீதத்திற்கு அதிகமான வீடுகள் லயன் தொடர் வீடுகளாக இருப்பதுடன் அந்த வீடுகள் லைன் அறைகள் ஆக அறிமுகம் செய்யப்படுகின்றது. ( தேசிய மட்டத்தில் பார்க்கின்ற போது இவ்வாறான வீடுகளின் சதவீதம் 3.8 ஆகும்). இற்றைக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு அண்மித்த முன்னைய காலத்தில் பிரித்தானிய தோட்ட நிருவாகிகளினால் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக நிர்மாணிக்கப்பட்ட மிகவும் பழைய இந்த தொடர் வீடுகள் பல தற்பொழுது மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. சூரிய ஒளி மற்றும் காற்றோட்டம் குறைவடைதல், அதிநெரிசல், தனித்துவமின்மை, உப குடும்பங்கள் உருவாகின்றமை போன்ற காரணங்களினால் பல குடும்பங்கள் ஒரு அறையினுள் வாழ்வதற்கு ஏற்படுகின்றமை மட்டுமல்லாது பலதரப்பட்ட துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றமை, பாதுகாப்பற்ற தன்மை, சமூக ஏற்புடைமையின்மை, சுகாதாரத்திற்கும் மற்றும் சிறுவர்களின் கல்விக்கும் பொருத்தமற்ற சுற்றுச் சூழலொன்று காணப்படுகின்றமை உள்ளடங்கலாக அதிகமான சமூக பிரச்சினைகள் இதன் ஊடாக உருவாகியுள்ளது.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் 2016 ஆம் ஆண்டில் சுகாதார அறிக்கைக்கு ஏற்ப (Annual Helth Return - 2016) பெருந்தோட்டத் துறையில் இவ்வாறான வீடுகள் மூன்று வகைகள் காணப்படுகின்றன.

1. தனி வீடுகள் (Single Line Houses)
2. இரட்டை வீடுகள் (Double Line Houses)
3. தற்காலிக வீடு

முன்பக்கத்தில் சாலை தூங்கும் அறையும் மற்றும் சிறிய சமையலறையை உள்ளடக்கிய தனி வீடு, அதன் பரப்பளவு 264 சதுர அடிகளாக மாத்திரம் இருப்பதுடன் ஒருபக்கத்திற்கு ஒரு வரிசையில் அமைந்த 10 - 12 அறைகளை உள்ளடக்கிய 02 குடும்பங்கள் வாழ்கின்ற இரட்டை வீடுகளின் பரப்பளவு 145 -175 சதுர அடிகளாகும். அதே போன்று பெருந்தோட்டத் துறையில் படிப்படியாக குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையுடன் காணப்படுகின்ற பேலி வீடுகள் போதியளவாக இல்லாத போது தற்பொழுது உள்ள வரிசை வீடுகளோடு இணைந்த வகையில் இருக்கின்ற காணியில் தகரம், மெழுகுப் புடைவை போன்றவற்றை பயன்படுத்தி தற்காலிக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டில் மிகவும் குறைவான வசதிகளே காணப்படுகின்றன.

வதிவிடம் தொடர்பில் பெருந்தோட்டச் சமூகம் அனுபவிக்கின்ற இவ்வாறான கஷ்டங்களை நீக்கி கௌரவமாக வாழ்வதற்கான உரிமை பெருந்தோட்டச் சமூகத்திற்கு உரிமையாக்கிக் கொள்ளும் அபிலாசையுடன் அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் புதிய வாழ்க்கை வீட்டு செயற்றிட்டத்தின் ஊடாக 07 பேர்சர்ஸ் காணி உரிமையுடன் குடி நீர் வசதிகள், மின்சாரம் மற்றும் பிரவேச வீதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தனி வீட்டு உரிமைகளை அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 2.2. எதிர்கால இலக்குகள்.

சௌபாக்கியம் என்ற செயற்பணி அரசின் கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக பல பிரிவுகளின் ஊடாக அரசின் எதிர்கால இலக்குகள் தொடர்பான கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளதுடன் அதன் பிரகாரம் அதற்கு இணங்கி இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக அமுல்படுத்த முடியுமான கொள்கைகளை அமுல்படுத்தல் புதிய அமைச்சின் குறிக்கோளாகும். அதன் பிரகாரம் சௌபாக்கியத்தின் செயற்பணி கொள்கை பிரகடனத்தின் ஊடாக விசேடமாக விழிப்பூட்டியுள்ள பெருந்தோட்ட சமூகத்தில் குறைந்த வருமான நிலைமை, சுகாதாரம் மற்றும் போசணைப் பிரச்சினைகள், வதிவிடங்கள் மற்றும் காணிப் பிரச்சினைகள் பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டு அதற்குத் தேவையான கொள்கைகள் தயார் செய்யப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன்

இங்கு கொள்கை கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தோட்டப் பிரதேசங்களில் குழந்தை மந்த போசணையை இழிவுபடுத்துவதற்கு விசேட போசணை மேலதிக உணவுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் எதிர் வரும் வருடத்தில் முறையாக அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதே போன்று தோட்ட மக்களின் வாழ்வாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக தேவையான மேலதிக வருமான உழைப்பு வழிகள், தொழிலின்மையை இழிவுபடுத்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு சௌபாக்கியம் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதற்கு இணைவாக வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் விவசாய பயிர்கள் பயிரிடப்படாத காணிகளைப் பயன்படுத்தி மாதிரி செயற்றிட்டங்கள், சேதன வளமாக்கி உற்பத்திச் செயற்றிட்டமொன்றை அமுல்படுத்துவதற்கும் அதன் ஊடாக சேதன பயிர் முன்னோடி செயற்றிட்டமொன்றை அமுல்படுத்தி பயிரச்செய்கையை ஊக்கப்படுத்தல், மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு மட்டத்தை கட்டியெழுப்புவது தொடர்பாகவும் எதிர்காலத்தில் கவனம் செலுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அமைச்சின் கீழ் செயற்படுகின்ற கிராமிய சக்தி மற்றும் பிரஜா சக்தி செயற்றிட்டங்கள் பெருந்தோட்ட மக்கள் தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குகின்ற அலுவலர்கள் மற்றும் பிரஜா சக்தி அலுவலர்களின் பங்குபற்றலுடனும் மேற்பார்வையுடனும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கும் அதன் ஊடாக பெருந்தோட்ட சமூகம் தொடர்பாக மேலதிக வருமான உருவாக்க வழிகளை ஏற்பாடு செய்து கொடுப்பதும் அமைச்சின் எதிர்கால இலக்காக உள்ளன.

# அத்தியாயம் 03

## நிதிச் செயலாற்றுகைக் கூற்று

### 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**2019 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| பாதீட்டு 2019 | | குறிப்பு | உண்மை நிலை 2019 | உண்மை நிலை 2018 |
|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | - | - |
| - | வருமான வரி | 1 | - | - |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - |
| | வருமானம் பெறுகைகள் | | - | - |
| 3,797,022,000 | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 1,479,160,000 | 1,839,817,825 |
| - | வைப்புகள் | | 103,105,787 | 127,663,842 |
| 7,000,000 | முற்பணக் கணக்குகள் | | 10,505,962 | 13,984,814 |
| - | ஏனைய பெறுகைகள் | | 40,956,377 | 25,840,748 |
| **3,804,022,000** | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | **1,633,728,126** | **2,007,307,229** |
| **3,804,022,000** | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ= (அ) + (ஆ) | | **1,633,728,126** | **2,007,307,229** |
| | கழி : செலவினம் | | | |
| | மீண்டுவரும் செலவினம் | | - | - |
| 148,450,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 146,307,741 | 122,518,890 |
| 103,100,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 100,221,285 | 91,711,663 |
| 121,750,000 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 121,311,998 | 102,066,782 |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - |
| 50,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 45,297 | - |
| **373,350,000** | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ) | | **367,886,321** | **316,297,335** |
| | மூலதனம் செலவினம் | | | |
| 7,300,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 6,402,983 | 9,681,122 |
| 6,050,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 4,169,193 | 6,761,702 |
| 4,500,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 3,000,000 | - |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - |
| 2,300,000 | மனித வள அபிவிருத்தி | 14 | 1,186,119 | 980,978 |
| 4,274,359,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 2,641,942,707 | 2,241,100,922 |
| **4,294,509,000** | மொத்த மூலதனம் செலவினம் (உ) | | **2,656,701,001** | **2,258,524,724** |
| **16,000,000** | பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ) | | **114,630,241** | **65,514,502** |
| - | வைப்புக் கொடுப்பனவுகள் | | 102,435,494 | 45,882,237 |
| 16,000,000 | முற்பணக் கொடுப்பனவுகள் | | 12,194,747 | 19,632,265 |
| **4,683,859,000** | மொத்த செலவினம் எ = (ஈ+ உ+ ஊ) | | 3,139,217,563 | 2,640,336,561 |
| **(879,837,000)** | 2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ -எ) | | **(1,505,489,438)** | **(633,029,332)** |

## 3.3 நிதி நிலைமைக் கூற்று

**2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

**ஏசீஏ -பீ**

| வரவு செலவு 2019 | குறிப்பு | உண்மை நிலை 2019 | 2018 |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 239,578,744 | 235,409,551 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5(ஏ) | 35,223,474 | 33,534,689 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | **274,802,218** | **268,944,240** |
| தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு | | | |
| தேறிய பெறுமதி | | (163,419,209) | (164,384,646) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 239,578,744 | 235,409,551 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | 198,642,683 | 197,919,335 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **274,802,218** | **268,944,240** |

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

..................................................
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2020.02.28

..................................................
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
திகதி : 2020.02.28

..................................................
பிரதான கணக்காளர்
பெயர் :
பதவி :
திகதி : 2020.02.28

## 3.4 நிதி நிலைமைக் கூற்று

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

| | உண்மை நிலை | |
|---|---|---|
| | 2019 | 2018 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | 40,956,377 | 25,840,748 |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | 103,105,787 | 127,663,842 |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனையவை | 1,479,160,000 | 1,800,206,000 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **1,623,222,164** | **1,953,710,590** |
| **கழி : பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 1,385,582,018 | 1,789,772,585 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 122,311,998 | 102,066,782 |
| பிற செலவுகள் | 6,334,870 | - |
| வைப்புக்கள் | 102,435,494 | 45,882,237 |
| நிதிச் செலவுகள் - திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | - | 337 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **1,616,664,380** | **1,937,721,941** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **6,557,783** | **15,988,649** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை | 9,806,157 | 10,196,434 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | 9,806,157 | 10,196,434 |
| கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு: | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 4,169,193 | 6,761,702 |
| முற்பணம் | 12,194,747 | 19,433,381 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | 16,363,940 | 26,195,083 |

| | | |
|---|---|---|
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | (6,557,783) | (15,998,649) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ) | 0.00 | (10,000) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| பெற்ற வைப்புகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றம் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)** | 0.00 | (10,000) |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | 0.00 | (10,000) |

## 3.5. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 3.5.1 அறிக்கையிடும் கால எல்லை

2019 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையான கால எல்லை இந்த நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்ப அறிக்கையிடல் கால எல்லையாகும்.

### 3.5.2 கணக்கீட்டுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளதுடன் சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளன. வேறு விதமாகக் குறிப்பிடாத விடத்து கணக்குகளைத் தயார் செய்வது மேம்படுத்தப்பட்ட நிதி அடிப்படையின்படி மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் அந்நிய ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.5.3 வருமானங்களை இனங்காணல்

பரிமாற்றம் செய்யப்பட்ட மற்றும் பரிமாற்றம் செய்யப்படாத வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய கால எல்லையை கவனத்திற் கொள்ளாது பணம் கிடைக்கின்ற கால எல்லையில் வருமானமாக இனங்காணப்படும்.

### 3.5.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்காணல் மற்றும் அளவிடல்

சொத்துக்களுக்குரிய எதிர்கால பொருளாதார பயன்கள் நிறுவனத்திற்கு கிடைக்கும் வகையில் உறுதிப்பாடொன்று இருக்கும் போது மற்றும் அந்தச் சொத்துக்கள் நம்பிக்கையுடன் அளவிடக் கூடியதாயின் அந்தச் சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக இனங்காணப்படும்.ஆதனம், பொறி மற்றும் உபகரண கிரயத்திற்கு இனங்காணப்படுவதுடன் கிரய மாதிரிப் படிவத்திற்கு ஏற்புடையதற்ற சந்தர்ப்பத்தில் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்தப்படும்.

### 3.5.5 ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்குரிய கணக்காகும்.

### 3.5.6 காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கையில் உள்ள தேசிய மட்டத்தில் புழக்கத்தில் உள்ள நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளை உள்ளடக்கிய காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் உள்ளடக்குகின்றன.

## 3.6 வருமானங்களை சேகரித்தல் தொடர்பான செயலாற்றுகை

| | | | | | ரூ. 000 |
|---|---|---|---|---|---|
| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
| | | நிதி மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | அளவு (ரூ) | இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக |
| - | ஏற்புடையதன்று | - | - | - | - |

## 3.7 ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு பயன்பாட்டு செயலாற்றுகை

| | | | | ரூ. 000 |
|---|---|---|---|---|
| நிதி ஏற்பாட்டு வகை | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு | | உண்மை செலவீனம் | பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடு, நிறைவு செய்யப்பட்ட இறுதி நிதி ஏற்பாட்டு அளவின் சதவீதமாக |
| | நிதி ஏற்பாடு | இறுதி நிதி ஏற்பாடு | | |
| மீண்டெழும் செலவினம் | 368,000 | 373,350 | 367,886 | 99% |
| மூலதனம் | 3,515,000 | 4,294,509 | 2,656,701 | 62% |

## 3.8 நி.பி. 208 இன் பிரகாரம், வேறு அமைச்சுக்கள் திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்தத் திணைக்களத்திற்கு மாவட்ட செயலகத்திற்கு மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கங்கள்.

| | | | | | | ரூ. ,000 |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல | நிதி ஏற்பாடு கிடைத்த அமைச்சு திணைக்களம் | நிதி ஏற்பாட்டின் நோக்கம் | நிதி ஏற்பாடு | | உண்மைச் செலவீனம | பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடு, வழங்கப்பட்ட இறுதி நிதி ஏற்பாடுகளின் % ஆக |
| | | | நிதி ஏற்பாடு | இறுதி நிதி ஏற்பாடு | | |
| 1 | தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம் மற்றும் புணர்நிர்மாணம், வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு | i). CAX - 5630 ஆம் இலக்க கார் வாகனத்தின் குத்தகை தவணைக் கொடுப்பனவை செலுத்துவதற்காக | 5,444 | 5,444 | 5,444 | 100% |
| | | ii). பட்டதாரி பயிலுனர்களின் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக | 500 | 500 | 363 | 73% |

## 3.9 நிதியல்லா சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை

| | | | | | ரூ. ,000 |
|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் குறியீடு | குறியீடு தொடர்பான விபரம் | 2019.12.31 ஆம் திகதியில் இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை | 2019.12.31 ஆம் திகதியில் நிதி நிலைமை அறிக்கையின் பிரகாரம் நிலுவை | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டவை | சதவீதமாக அறிக்கையிடல் |
| 9151 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | கொவிட் தொற்று நோயின் காரணமாக 2019.12.31 ஆம் திகதியில் இருப்பு மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டு நிறைவு செய்வதற்கு இயலாது போனமை | | | |
| 9152 | இயந்திரசாதனங்கள் | | 239,578,744 | - | 100% |
| 9153 | காணி | | | | |
| 9154 | கற்புலனாகாச் சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் | | | | |
| 9160 | பூர்த்தியடையாத வேலைகள் | | | | |
| 9180 | குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் | | | | |

## 3.10 நிதியல்லா சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை

கணக்காய்வு அறிக்கை சிங்கள மொழியில் உள்ளடக்கப்பட்டுள்ளது (பக்க இல 39-55)

# 04 ஆம் அத்தியாயம்

## செயலாற்றுகை குறிகாட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| விசேட குறிகாட்டிகள் | எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் சதவீதம் (%) ஆக உண்மை பூர்த்தியாக்கல்கள் | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| அடிப்படை வசதிகளுடன் வழங்கப்பட்ட புதிய வீடுகளின் எண்ணிக்கை | | | 30 % |
| கூரை தகரமிடப்பட்ட லைன் அறைகளின் எண்ணிக்கை | | | 13 % |
| வழங்கப்பட்ட நீர் விநியோக செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | | | 60% |
| நிறைவு செய்யப்பட்ட புதிய கழிவறைகளின் எண்ணிக்கை | | | 16 % |
| அபிவிருத்தி செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை | | | 40 % |
| திருத்தம் செய்யப்பட்ட / அபிவிருத்தி செய்யப்பட்ட தோட்ட பாதைகளின் எண்ணிக்கை | | 84 % | |
| வழங்கப்பட்ட பொது வசதிகள் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | | | 58 % |
| நடாத்தப்பட்ட சமூக பயிற்சி / அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | | | 36 % |
| தொழிற்பயிற்சி வழங்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | | | 26 % |

2019 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் அபிவிருத்தி இலக்குகளை அடைய ரூ.2,724 மில்லியன் (நிதி எண்கள் 11 மற்றும் 17 மூலம்) விண்ணப்பிக்கப்பட்டாலும் 31.12.2019 வரை பெறப்பட்ட தொகை ரூ.1,268 மில்லியன்கள் ஆகும்.

அதற்கமைய அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் வெளியீட்டை அடைய தேவையான அளவு பணம் கிடைக்காமையும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 5. ஆம் அத்தியாயம்

## நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) நிறைவேற்றிக் கொள்ளும் செயலாற்றுகை

### 5.1 இனங்காணப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடுக.

| இலக்கு / குறிக்கோள்கள் | இலக்குகள் | வெற்றிக் குறியீடுகள் | | இது வரை அடைந்து கொண்ட வெற்றிச் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-<br>49% | 50%<br>74% | 75%<br>100% |
| நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கு 11<br>2030 ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் போதியளவான, பாதுகாப்பான வீடு கிடைக்கப் பெறுதல் மற்றும் வதிவிடங்களை மேம்படுத்தலை உறுதிப்படுத்தல். | லைன் அறைகளில் வாழ்கின்ற 4,500 குடும்பங்கள் தொடர்பாக புதிய வீடுகள் மற்றும் காணி உரிமைகளை வழங்குதல்.<br>சேதமடைந்த 1000 லைன் அறைகளின் கூரைகளை மீள அமைத்தல் | 1<br><br>2 | நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட காணி உரிமை உறுதிகளின் அளவு<br><br>கூரை திருத்தம் செய்யப்பட்ட லைன் அறைகளின் எண்ணிக்கை | 30%<br><br>13% | | |
| நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கு 6<br>2030 ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் உன்னத மட்டத்தில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு சமமான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்தல்.<br>2030 ஆம் ஆண்டாகும் போது போதியளவான துப்பரவு ஏற்பாடு மற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சகலருக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல். | குடிநீர் வசதிகளற்ற 4000 குடும்பங்களுக்கு நீர் வசதிகளை ஏற்பாடு செய்தல்.<br><br>போதியளவான துப்பரவு ஏற்பாட்டு வசதிகளற்ற 3500 குடும்பங்களுக்கு துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை வழங்குதல். | 1<br><br>1 | குடிநீர் வசதிகள் கிடைக்கப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை<br><br>துப்பரவு ஏற்பாட்டு வசதிகள் கிடைக்கப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை | 48%<br><br>40% | | |
| நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கு 04<br>2030 ஆம் ஆண்டாகும் போது சகல ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் தொடர்பாக பண்புசார் மட்டத்தில் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தியொன்றை நோக்கி பிரவேசித்தல். | 400 முன் பள்ளி பிள்ளைகளை உள்ளடக்கும் வகையில் தோட்டத்துறை பிள்ளைகளின் அபிவிருத்தி நிலையங்கள் 15 இன் அபிவிருத்தி | 1<br><br>2 | அபிவிருத்தி செய்யப்பட்ட சிறுவர்<br><br>அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை பயன்பெறு பிள்ளைகளின் எண்ணிக்கை | 46% | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கு 01 மற்றும் 02 வறுமை நிலைமையை இல்லாதொழித்தல்<br><br>உணவுப் பாதுகாப்பு இலக்கு 01<br><br>2030ம் ஆண்டு ஆகும் போது எல்லை வறுமை நிலையை இல்லாதொழித்தல் மற்றும்<br><br>இலக்கு 02<br><br>2030ம் ஆண்டு ஆகும் போது பட்டிணியை ஒழித்தல் மற்றும் வறுமையில் வாடுகின்றவர்கள் தொடர்பாக போசாக்கு மற்றும் போதியளவான உணவுப் பொருட்களை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்வதனை உறுதிபடுத்தல். | வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் 1,000 அமுல்படுத்தல். | 1 | 2030 ஆம் ஆண்டாகும் போது நாட்டில் நிலவும் தேசிய தீர்மானத்திற்கு ஏற்ப வறுமையினால் வாடுகின்ற மக்களின் அளவினை குறைந்த பட்சம் அரைவாசியினால் குறைத்தல். | | | 83% |
| | | 2 | 2030 ஆம் ஆண்டின் போது மந்த போசாக்கு நிலைமையைக் குறைத்தல் மற்றும் 5 வருடங்களுக்குக் குறைந்த பிள்ளைகளின் வயதிற்கு எற்ப பலதரப்பட்ட உயரம் இல்லாது போதல் மற்றும் உயரத்திற்கு உரிய நிறை இன்மை பற்றிய இலக்குகளுக்கு 2025 ஆம் ஆண்டில் அண்மித்தல். | | | |

## 5.2. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் செயற்பாட்டின் வெற்றி மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்கவும்.

**நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் வெற்றிகள் மற்றும் சவால்கள்:**

இலங்கையில் வசிக்கின்ற ஒரு மில்லியன் அளவான பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்வாதார நிலைமையை மேம்படுத்தல் இந்த அமைச்சின் பிரதானமான பணியாகும்.

பெருந்தோட்டச் சமூகம் என்பது இலங்கையில் ஏனைய இனக் குழுக்களுடன் ஒப்பீடு செய்யும் போது மிகவும் பின்தங்கிய வாழ்வாதார தரத்திற்கு உரிமை கோருகின்ற இனக் குழுவொன்றாக இருப்பதுடன் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளுக்கு ஏற்ப இலங்கையில் ஏனைய இனக் குழுக்களுடன் ஒப்பீடு செய்யும் போது அவர்கள் உழைக்கின்ற மாதாந்த வருமானம் குறைந்த அளவில் காணப்படுவதுடன் மக்களின் விசேடமாக 05 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் மந்த போசாக்கு நிலைமை மிகவும் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. 2012 ஆண்டு தொகை மதிப்பீட்டு அறிக்கைக்கு ஏற்ப சுகாதார பாதுகாப்பு குடிநீர் வசதிகள் இருப்பது தோட்ட சனத்தொகையில் 52 சதவீத அளவானதாக இருப்பதுடன் சனத்தொகையில் 65 சதவீதத்தினர் மிகவும் குறைந்த வசதிகளுடன் கூடிய 200 சதுர அடி அளவான தகர கூரையைக் கொண்ட வரிசை லைன் அறைகளைக் கொண்ட வசிப்பிடங்களில் வாழ்கின்றனர். நிலையான அபிவிருத்தியடைந்த இலங்கையொன்று தொடர்பான நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களில் வறுமை நிலையை குறைப்பதை உறுதிப்படுத்தல், சிறுவர் மந்தபோசணை நிலைமை குறிகாட்டிகளுக்கு நெருங்குவது மற்றும் பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வதிவிடங்களை உரிமையாக்கிக் கொடுத்தல் என்ற இலக்கினை அடைந்து கொள்வதற்காக செயற்படும் போது அவ் வசதிகள் குறைந்த அளவில் நிலவுகின்ற பெருந்தோட்ட சமூகம் தொடர்பாக மிகவும் அதிக கவனம் செலுத்துதல் மிக முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது.

அதன் பிரகாரம் பெருந்தோட்ட சமூகம் தொடர்பாக தமது பாதுகாப்பான வதிவிடங்களை உரிமையாக்கிக் கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர்களுக்கு அறுதி உறுதிகள் சொந்தமான 7 பேர்ச்சஸ் நிலப்பகுதி மற்றும் குடிநீர் வசதிகளுடன் மேம்படுததப்பட்ட பாதுகாப்பு வசதிகளைக் கொண்ட தனி வீடுகள் அவர்களுக்கு வழங்குவதற்கு இயலுமை கிடைத்தமை அமைச்சு பெற்ற விசேட வெற்றியாக கருத முடியும்.

எனினும், வீடமைப்புச் செயற்றிட்டம் தொடர்பாக எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்வது தொடர்பாக போதியளவான பிரகாரம் நிதி ஏற்பாடு இல்லாது போனமை, வீடமைப்பு நிர்மாணிப்பு தொடர்பாக பொருத்தமான காணி வசதிகளை வழங்குதல் கடினமானமையும் காணிகளை சுவீகரித்துக் கொள்ளல் தொடர்பாக நீண்ட காலம் எடுக்கின்றமை, விசேடமாக வீடமைப்பு நிர்மாண செயற்றிட்டத்தை செயற்படுத்துகின்ற செயன்முறையில் காணப்படுகின்ற குறைபாடுகளைக் காரணமாகக் கொண்டு எதிர்பார்த்த இலக்கினை நிறைவேற்றிக் கொள்ளல் சவாலாக உருவெடுத்துள்ளது.

பெருந்தோட்ட சமூகத்தில் சரியாக அரைவாசியினர் பாதுகாப்பான குடிநீர் வசதி இல்லாமை இலங்கையினால் நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்ளும் பணியில் பெருந்தோட்ட சமூகத்தின் குடிநீர் தேவைப்பாட்டை பூரணப்படுத்தாது அந்த இலக்கினை நோக்கி பயணித்தல் சவாலொன்றாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் பெருந்தோட்டச் சமூகத்ததை இலக்காகக் கொண்டு நீர் விநியோக செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு போதியளவான கவனம் செலுத்தப்படாமை மற்றும் அது தொடர்பாக போதியளவான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்காமை மற்றும் விசேடமாக பாதுகாப்பான குடி நீரை விநியோகித்துக் கொள்வதற்காக பொருத்தமான நீர் மூலங்கள் இல்லாமை, தற்பொழுது காணப்படுகின்ற நீர் மூலங்களை அடிப்படையாகக் கொண்டு நீர் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக பாரிய தொகை பணம் செலவாகின்றமையும் நீர் செயற்றிட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக போதியளவான பிரகாரம் செயற்றிட்ட ஆலோசனைகளை சமர்ப்பிப்பதற்கு உரிய வகுதியினர் செயற்படாமை காரணமாக எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ளல் பிரச்சினையாக உள்ளது.

பெருந்தோட்டப் பிரதேசங்கள் பல மலைநாட்டுக்கு உட்பட்டு இருப்பதுடன் அதன் நில வேறுபாடுகளை கவனத்திற் கொள்ளும் போது நிர்மாணிப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு அதிக செலவீனங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்றமையும் அந்த பிரதேசங்கள் பல அதிக பாதுகாப்பு கூர்உணர் பிரதேசங்களாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் நிர்மாணிப்பு செயற்றிடங்களை அமுல்படுத்துவது தொடர்பாக தேவையான அங்கீகாரங்கள் கால தாமதம் ஏற்பட்டமை அவ்வாறில்லாத அத்தியாவசிய இடங்கள் தொடர்பாக புதிய செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் சுற்றாடல் காரணங்களின் காரணமாக அங்கீகரிக்கப்படாமையும் பிரச்சினையொன்றாக உள்ளது.

# 06 ஆம் அத்தியாயம்

## மனிதவளக் கட்டமைப்பு

### 6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமை

| | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | தற்பொழுது இருக்கின்ற ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடம் / (மிகை) ** |
|---|---|---|---|
| சிரேஸ்ட்ட | 21 | 13 | 8 |
| மூன்றாம் நிலை | 6 | 3 | 3 |
| இரண்டாம் நிலை | 279 | 254 | 25 |
| ஆரம்ப நிலை | 36 | 33 | 3 |
| மொத்தம் | 342 | 303 | 39 |

### 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனிதவளப் பற்றாக்குறை தாக்கம் செலுத்தும் விதம்

ஒரு மில்லியனுக்கும் அதிகமான பெருந்தோட்ட சமூகத்தின் நலன்புரி தொடர்பாக தாபிக்கப்பட்டுள்ள இந்த அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ள பரந்த பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அங்கீகரித்த பதிவியணி போதியளவாக இன்மை பிரச்சினையொன்றாகும். தற்பொழுது அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றமையினால் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதுடன் நாளாந்த கடமைகளை மேற்கொள்ளும் போதும் கடினங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அமைச்சில் சிரேஷ்ட பதவிகள் 08, மூன்றாம் நிலைப் பதவிகள் 03, இரண்டாம் நிலைப் பதவிகள் 25, ஆரம்ப நிலைப் பதவிகள் 03 தொடர்பாக வெற்றிடங்கள் காணப்படுகின்றன. சிரேஷ்ட பதவிகள் வெற்றிடமாகின்றமை தீர்மானமெடுத்தல் செயற்பாடுகள் தாமதமடைவதற்கு தாக்கம் செலுத்துவதுடன், அமைப்புப் பதவிகளை உரிய பிரகாரம் செயற்படாமைக்கு தாக்கம் செலுத்த முடியும். அதனால் மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை ஊழியர்களின் செயற்றிறனான பங்களிப்பு தாக்கம் ஏற்படும். இரண்டாம் நிலை ஊழியர் பற்றாக்குறை அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டில் நேரடியாக தாக்கம் செலுத்துகின்றது. அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் உன்னத மட்டத்தை அடைந்து கொள்வதற்கு தடைகள் ஏற்படுகின்றமை தொடக்கம் மொத்த செயலாற்றுகைக்கு மனிதவளப் பற்றாக்குறை தாக்கம் செலுத்துகின்றது.

அதன் பிரகாரம், இரண்டாம் நிலை முகாமைத்துவச் சேவை அலுவலர் சேவையில் 09 வெற்றிடங்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர் சேவையில் 08 வெற்றிடங்கள் காணப்படுகின்றமையும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவிச் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட 02 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை நாளாந்த கடமைகளை மேற்கொள்ளும் போது மிகவும் கடினங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. மேலும் தொழில்நுட்ப அலுவலர் சேவையின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 08 ஆக இருப்பதுடன் தற்பொழுது ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்கள் 03 பேர் சேவையில் ஈடுபடுவதுடன் தொழில்நுட்ப அலுவலர் சேவையில் 05 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த அமைச்சின் இந்திய அரசின் நடுத்தர அளவான நன்கொடை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெருந்தோட்டச் சமூகத்திற்கு 14,000 வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக வீடமைப்புச் செயற்றிட்டம் போன்ற பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பரந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பதவியணி போதியளவில் இன்மை முக்கியமான பிரச்சினையொன்றாகக் காணப்படுகின்றது.

மேலும், முகாமைத்துவச் சேவையின் (II/I) தரத்தில் அனுபவமிக்க அலுவலர்கள் இன்மையும் நிறுவன செயற்பாடுகளை உரிய பிரகாரம் நடாத்திச் செல்வதற்கு தடையாக உள்ளது. நிருவாக அலுவலர் பதவியும் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் தற்பொழுது சேவையாற்றுபவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்துகொண்ட அலுவலர் ஒருவராகும். பணிப்பாளர் (திட்டமிடல்) பதிவியும் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் பணிப்பாளர் (பொறியியலாளர்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) தொடர்பாக அங்கீகரித்த பதவிகள் 02 இல் தற்பொழுது ஒரு அலுவலர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டுவருகின்றார். இந்த அமைச்சின் ஊடாக பெருந்தோட்டச் சமூகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நோக்கி பல செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன் இந்தப் பதவி வெற்றிடங்களாகக் காணப்படுவதுடன் நாளாந்த அலுவலக கடமைகளை மேற்கொள்ளும் போதும் செயற்றிட்டங்களின்

அபிவிருத்தி இலக்குகளை உயர் மட்டத்தில் அடைந்து கொள்வதற்கும் மற்றும் மொத்தச் செயலாற்றுகைக்கு மனிதவள பற்றாக்குறை தாக்கம் செலுத்தியுள்ளது.

## 6.3 மனிதவள அபிவிருத்தி

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்ட கால எல்லை | தொத்த முதலீடு (ரூ.000) | | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாடு) | வெளியீடு / பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| வினைத்திறனான மேற்பார்வை தொடர்பாக ஒப்பந்த மேற்பார்வை மற்றும் நிர்வாகம் தொடர்பான தேவைப்பாடுகள் | 02 | 01 நாள் | 7 | | உள்நாடு | சர்வதேச ஒப்பந்தங்களைச் செய்யும் போது விசேடமாக அமைச்சு விடயப் பரப்புக்கு ஏற்ப இந்திய அரசாங்கத்துடன் இராஜதந்திர மட்டத்தில் பணியாற்றும் போது உறவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ளல்.<br>அமைச்சு செயலாளர் அமைச்சு விடயப் பரப்புக்கு ஏற்ப தூதுவராலய பணிகளை மேற்கொள்ளும் போது தேவையான வசதிகளை வழங்குதல். |
| நகர கழிவு முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு | 05 | நாள் 01 | 35 | | உள்நாடு | நகரம் / புதிய குடியேற்றங்களை நிர்மாணிக்கும் போது அந்த செயற்றிட்டங்களை திட்டமிடுகின்ற சந்தர்ப்பத்திலிருந்து நிர்மாணிப்பின் இடை நடுவில் மற்றும் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டதன் பின்னரும் சேருகின்ற கழிவகற்றல் முறைமையை திட்டமிடல். |
| நடைமுறைச் சாத்தியமற்ற விபரக்குறிப்பின் படி ஒப்பந்த உடன்படிக் கைகளைச் செய்தல் மற்றும் பிரச்சினை | 02 | நாள் 01 | 7 | | உள்நாடு | நடைமுறைச் சாத்தியமற்ற விபரக் குறிப்புக்கு ஏற்ப ஒப்பந்த உடன்படிக்கைகளைக் கைசாத்திடுவதன் மூலம் ஏற்படுகின்ற மோசடி, பிணக்குகள் மற்றும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் விதம். |
| அரச கொள்வனவு ஏற்பாட்டு நடைமுறை மற்றும் ஒப்பந்தம் பற்றிய டிப்ளோமா | 01 | வருடம் 01 | 100 | | உள்நாடு | அரசின் கொள்வனவு ஏற்பாட்டுச் செயற்பாட்டை முறையாக அமுல்படுத்தல் மற்றும் அதன் பிரகாரம் உடன்படிக்கைகளைச் செய்தல். |
| தொகை பற்றுச்சீட்டு விலையிடல் மற்றும் சதவீதப் பகுப்பாய்வு | 02 | நாள் 05 | 30 | | உள்நாடு | நிர்மாணிப்பு தொடர்பான பற்றுச்சீட்டு ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கும் போது உரிய விலையிடல் மற்றும் அதனுடன் தயார் செய்யப்பட்டுள்ள உண்மைத் தன்மை பற்றிய புரிந்துணர்வை பெற்றுக் கொள்ளல். |
| உரையாடல் தமிழ் பாடநெறி | 01 | நாள் 10 | 27 | | உள்நாடு | தமிழ் மொழியை பயன்படுத்தல். |
| கோவை முகாமைத்துவம், பொதுவான அலுவலக நிர்வாகம் மற்றும் தாபன விதிக் கோவை | 02 | நாள் 3 | 7 | | உள்நாடு | அலுவலக முறை இலகுபடும் வகையில் கோவைகளை பேணல் மற்றும் அதன் முக்கியத்துவம் மற்றும் அதற்குரிய தாபனவிதிக் கோவை ஒழுங்குவிதிகள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கணனி பிரயோகம் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 01 | மாதம் 06 | 25 | | உள்நாடு | அலுவலகத் தேவைகள் தொடர்பாக கணனி மென்பொருள் பயன்பாடு (Ms WORD / Ms Excell) (Ms WORD / Ms Excell) |
| அசேதன வீட்டுத் தோட்டம் பற்றிய இரண்டு நாள் செயலமர்வு | 80 | நாள் 04 | 97 | | உள்நாடு | வீட்டுத்தோட்ட உருவாக்கம், வீட்டுத் தோட்ட பயிர்கள், சேதனப் பசளை தயாரிப்பு, உள்நாட்டு கிருமி நாசினி முறைமையை அறிமுகம் செய்தல். பெருந்தோட்டச் சமூகம் தொடர்பாக பொருத்தமான வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை முறைமைகளை அறிமுகம் செய்தல் மற்றும் அவர்களை அது தொடர்பாக ஊக்கப்படுத்துவதற்கு அவசியமான நடைமுறை அறிவுப் பயன்பாடு |
| பெருந்தோட்டச் சமூக தொடர்பாடல் வசதிகள் வழங்குகின்ற அலுவலர்களை பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டம். | 200 | நாள் 04 | 162 | | உள்நாடு | பெருந்தோட்டச் சமூக தொடர்பாடல் வசதிகளை வழங்குகின்ற அலுவலர்கள் நேரடியாக தொடர்புபடுகின்ற தோட்டத்தை அண்மித்த அடிப்படை சமூகம் மற்றும் தோட்ட முகாமைத்துவத்துடன் பணியாற்றுவதற்காக மென் திறன்கள், தொடர்பாடல் திறன்களை அறிமுகம் செய்தல்<br>கோவை முகாமை, செயற்றிட்ட ஆலோசனை மற்றும் அறிக்கைகளைத் தயார் செய்தல்.<br>செயற்றிட்ட பரீட்சிப்பு மற்றும் அறிக்கையிடல் பற்றிய ஆரம்ப அறிவைப் பெற்றுக் கொள்ளல். |
| இயலளவு பயிற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 100 | நாள் 01 | | | உள்நாடு | அலுவலக ஆவண நடைமுறை, கோவைப்படுத்தல், தபால் மற்றும் அலுவலக முகாமைத்துவம், நிறுவன செயற்பாடுகள் பற்றிய அறிவு. ஒழுக்கம் மற்றும் நடத்தை பற்றிய புரிந்துணர்வு மற்றும் கடமை பொறுப்பு மற்றும் கடமைகளை அறிமுகம் செய்தல்.<br>மேற்பார்வை அலுவலரின் பொறுப்பு பயன்பாட்டை இனங்காணல்.<br>நிதி முகாமைத்துவம் மற்றும் சேதம் மற்றும் நட்ட ஆவண பேணல் பற்றிய அறிவு. |
| மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் சார் சிறந்த பழக்கம் தொடர்பான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | 01 | நாள் 10 | 690 | 248 | வெளிநாடு | நாட்டின் மொத்த அபிவிருத்தியை இலக்கு வைத்து மனித வளத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக மனிதவள திட்டமிடல் தொடர்பான நீண்டகால முக்கியத்துவம் மற்றும் அதற்கு ஏற்ப மனிதவள திட்டமிடல், பயன்படுத்தல் மற்றும் பயிற்சியளித்தல் பற்றிய மலேசிய அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படுகின்ற வெற்றிகரமான செயற்பாடுகள் சர்வதேச அனுபவங்கள். |
| மனிதவள முகாமைத்துவம் | 01 | நாள் 10 | 896 | | வெளிநாடு | அலுவலக செயலாற்றுகையை உயரிய மட்டத்தில் பேணிக் கொள்வதற்கு மனிதவள முகாமை செய்தல் மற்றும் அது தொடர்பான சீன அரசாங்கம் எடுத்துள்ள முறைமைகள் பற்றிய சர்வதேச அனுபவங்கள். |
| விநியோக சங்கிலி முகாமை தொடர்பான செயலமர்வு | 01 | நாள் 11 | 388 | 274 | வெளிநாடு | பலதரப்பட்ட செயற்றிட்டங்களுக்குரிய விநியோக வலையமைப்பை தொடர்ச்சியாக பேணல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள், அந்தச் சந்தர்ப்பங்களை திட்டமிடல், கைவிடுவதனால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் விநியோகச் சங்கிலி முகாமையின் முக்கியத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வெளிநாட்டு அனுபவங்கள். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆசிய பசுபிக் நாடுகள் தொடர்பாக காகிதமற்ற வர்த்தக மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் பற்றிய 2019 ம் ஆண்டு கருத்தரங்கு | 01 | நாள் 13 | 28 | 61 | உள்நாடு | கிரயம் மற்றும் கால முகாமைத்துவத்தின் வினைத்திறன் சகல பிரிவுகளுக்கும் மிக முக்கியமாகும். கணனி மற்றும் வலையமைப்பு இணைப்பு ஊடாக ஆவணங்களை பரிமாற்றம் செய்வதன் ஊடாக அச்சு ஊடகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை குறைப்பதற்கு அரச பிரிவு மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்வதற்கு இயலுமை கிடைத்தமை. பதவியணிக்கிடையில் தொலைத்தொடர்பு இலகுவடைந்தமை. |

### 6.3.1 நிறுவன செயலாற்றுகைக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிப்புச் செய்கின்ற விதம்

நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பாக மனிதவள அபிவிருத்தி நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற விதம் அமைச்சின் ஊடாக சிறப்பாகக் காண முடிகின்றது. 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக நிறுவனத்தின் செயலாற்றுகை முன்னேற்றமடைந்த விதம் 2019 ஆம் ஆண்டில் காணக் கூடியதாக உள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக பங்குபற்றிய அலுவலர்களின் குறிப்பிடத்தகு செயலாற்றுகையொன்று கடந்த வருடத்தின் போது காட்டப்பட்டுள்ளது.

அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள், அரச கொள்வனவு ஏற்பாட்டு செயற்பாடுகள் பற்றிய பாடநெறிகள், நிர்வாகத் திறன்கள், சிங்கள மற்றும் தமிழ் மொழி பற்றிய பயிற்சி பாடநெறிகள், செயற்றிட்ட முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் கணனிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல துறைகளை உள்ளடக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் பல தொடர்பாக நிறுவனத்தில் கருதத்தகு ஊழியர் எண்ணிக்கையொன்று பங்குபற்றியுள்ளது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பின்னர் ஊழியர்கள் சரியான அலுவலக முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்துவதற்கு நிறுவனத்தின் ஊடாக எழுகின்ற பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு சரியான கொள்வனவு ஏற்பாட்டுத் தீர்மானங்களை எடுத்து அரச நிதியை சரியாக பயன்படுத்துவதற்கும் பொருத்தமான அபிவிருத்தி செயற்றிட்டங்களை இனங்கண்டு கொள்வதற்கு இயலுமை கிடைத்தமை மற்றும் உச்ச வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு அரச கொள்கைகளை திட்டமிடும் போதும் மற்றும் இற்றைப்படுத்தும் போதும் உச்ச வள வழங்கலை மேற்கொண்டு நிறுவனத்தின் செயலாற்றுகையை உச்சப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

# 07 ஆம் அத்தியாயம்

## இணக்கப்பாட்டு அறிக்கை

| எண் | தொடர்புபடுத்தப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (தொடர்புடையதாகும் / தொடர்பற்றது) | இணக்கப்பாடு இல்லையாயின் அது தொடர்பாக சுருக்கமான விளக்கம் | இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்கு உத்தேசிக்கின்ற சரியான தீர்மான செயன்முறை |
|---|---|---|---|---|
| 1 | **கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்று / கணக்குகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்று | இணக்கமற்றது | சகல மாதிரிப் படிவங்களையும் மிகச்சரியாக தயார் செய்யும் போது ஒரு நாள் காலம் கடந்திருந்தமை | வருட ஆரம்பம் முதல் தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு தயாராதல் |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | ஏற்புடையதாகும் | | |
| 1.3 | தொழில் முயற்சி மற்றும் உற்பத்திக் கணக்கு (வர்த்தக முற்பணக்கணக்கு) | இணக்கமற்றது | இவ்வமைச்சினால் அரச வியாபாரம் மேற்கொள்ளப்படுவதில்லை | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணக்கமற்றது | அதே | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | இணக்கமற்றது | அதே | |
| 1.6 | ஏனைய | ஏற்புடையதாகும் | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பராமரிப்பு (நி.பி. 445)** | | | |
| 2.1 | அரச நிர்வாக சுற்றறிக்கை இல 267/2018 இற்கு ஏற்ப நிலையான சொத்துக்கள் ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணிச் செல்லல். | ஏற்புடையதாகும் | | |
| 2.2 | தனியாள் சம்பளங்கள் / தனியாள் சம்பள அட்டையை இற்றைப்படுத்தி பேணிச் செல்லல். | ஏற்புடையதாகும் | | |
| 2.3 | கணக்காய்வு விசாரணை ஆவணங்களை இற்றைப்படுத்தி பேணிச் செல்லல். | ஏற்புடையதாகும் | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கையை இற்றைப்படுத்தி பேணல். | ஏற்புடையதாகும் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.5 | சகல மாதாந்த கணக்கு சுருக்கத்தைத் (CIGAS) தயார் செய்து உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல். | ஏற்புடையதாகும் | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளை ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணல். | இணக்கமானது | | |
| 2.7 | சொத்து ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணல். | இணக்கமானது | | |
| 2.8 | இருப்பை இற்றைப்படுத்தி பேணல். | இணக்கமானது | | |
| 2.9 | சேத நட்டத்தை இற்றைப்படுத்தி பேணல். | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு இற்றைப்படுத்தி பேணல். | இணக்கமானது | | |
| 2.11 | உப பத்திர புத்தக (GA - N20) ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணல். | இணக்கமானது | | |
| 3 | **நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக பணிகளை பிரதிநிதித்துவப்படுத்தல். (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரம் நிறுவனத்தில் சாட்டப்பட்டுள்ளமை. | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரம் கையளித்தல் தொடர்பில் நிறுவனத்தில் அறிவுறுத்தியிருத்தல். | இணக்கமானது | | |
| 3.3 | சகல கொடுக்கல் வாங்கல்களும் இரு அலுவலர்கள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையின் ஊடாக அங்கீகரிக்கும் வகையில் அதிகாரம் வழங்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கைக்கு ஏற்ப அரச சம்பளப் பத்திர மென்பொருள் பொதியைப் பயன்படுத்தும் போது கணக்காய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுதல். | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டமிடலை தயார் செய்தல்.** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயார் செய்தல். | இணக்கமானது | | |
| 4.2 | | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயார் செய்தல். | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்து தேசிய வரவு செலவுத்திட்ட தீணைக்களத்திற்கு (NDB) உரிய தினத்தில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த நிதிப் பாய்ச்சல் கூற்றை உரிய தினத்தில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் தீர்மானித்துள்ள தினத்தில் சகல கணக்காய்வு வினாக்களுக்கு பதில் வழங்கியிருத்தல். | இணக்கமற்றது | உரிய கால எல்லையினுள் பதில் வழங்கப்படவில்லை | உரிய தினத்தில் பதில்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது |
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) DMA/1-2019 இற்கு ஏற்ப வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளருடன் கலந்துரையாடியதன் பின்னர், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயார் செய்தல். | இணக்கமானது | | |
| 6.2 | சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்தினுள் பதில் வழங்கியிருத்தல். | இணக்கமற்றது | சில உள்ளக கணக்காய்வு வினாக்கள் தொடர்பாக ஒரு மாதத்தினுள் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) ஆம் உப பிரிவின் பிரகாரம், சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | இணக்கமானது | | |
| 6.4 | நிதி ஒழுங்குவிதி 134(3) இன் பிரகாரம், சகல உள்ளக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இற்கு ஏற்ப, குறைந்த பட்சம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் 04 ஆவது வருடத்தின் போது நடாத்தப்பட்டிருந்தமை. | இணக்கமானது | உரிய பிரகாரம் கூட்டங்கள் | |
| 8 | **சொத்து முகாமை** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமை சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பான தகவல்களை தலைமை கணக்காய்வாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | இணக்கமற்றது. (கட்டடங்கள் மற்றும் வாகனங்கள்) | இறுதிக் கணக்குகளில் மற்றும் அரச கணக்குத் திணைக்களத்திற்கு இந்தத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| 8.2 | மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், அந்தச் சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல் ஒருங்கிணைப்பு தொடர்பாக பொருத்தமான தொடர்பு அலுவலர் ஒருவரை நியமித்து அந்த அலுவலர் பற்றிய தகவலை தலைமை கணக்காய்வாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல். | இணக்கமானது | | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை இல 05/2016 இற்கு ஏற்ப பொருள் இருப்பு மதிப்பீடு நடாத்தப்பட்டு உரிய அறிக்கை உரிய தினத்தில் கணக்காய்வாளருக்கு சமர்ப்பித்திருத்தல். | இணக்கமற்றது | நிலவுகின்ற தொற்று நோய் (Covid 19) நிலைமையின் காரணமாக இருப்பு மதிப்பீட்டுக்குரிய செயற்பாடுகள் உரிய பிரகாரம் நிறைவு செய்வதற்கு இயலாது போய் உள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| 8.4 | வருடாந்த இருப்பு மதிப்பீட்டிலிருந்து வெளிப்பட்ட மேலதிக, பற்றாக்குறை மற்றும் வேறு சிபாரிசுகள் சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலத்தினுள் நிகழ்ந்திருக்கின்றமை. | இணக்கமற்றது | அதே | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.5 | பாவனைக்கு பயன்படுத்த முடியாதென ஒதுக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் நிதிப் பிரமாணம் 772 இற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டது. | இணக்கமற்றது | அதே | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| 9 | **வாகன முகாமை** | | | |
| 9.1 | குழு வாகனங்கள் தொடர்பாக நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கையைத் தயார் செய்து உரிய தினத்தில் கணக்காய்வாளரிடம் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 9.2 | வாகனம் செலுத்த தகாதது என குறிப்பிட்டு 6 மாதங்களுக்குக் குறைந்த காலத்தில் பயன்படுத்தியிருக்கின்றமை | இணக்கமானது | | |
| 9.3 | வாகன லொக் புத்தகம் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டு பேணிச் செல்லல். | இணக்கமானது | | |
| 9.4 | சகல வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தமை | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம், வாகனங்கள் எரிபொருள் விரயத்தை மீள பரீட்சித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை கால எல்லையின் பின்னர் குத்தகை வாகன லொக் புத்தகங்களில் முழுமையான உரிமை கையளிக்கப்பட்டிருந்தமை. | இணக்கமானது | | |
| 10 | **வங்கிக் கணக்கு முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதியில் வங்கி கணக்கிணக்கக் கூற்று தயார் செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.2 | மீளாய்வு வருடத்தின் போது அல்லது அதற்கு முன்னரான வருடங்களில் இருந்து முன்கொண்டு வரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருந்தமை | இணக்கமானது | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கம் செய்யப்பட வேண்டி இருந்த நிலுவை தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்பட்டு அந்த நிலுவைகளை ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருந்தமை. | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டு பயன்பாடு** | | | |
| 11.1 | ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு அவற்றின் எல்லையை மீறிச் செல்லாத வகையில் செலவு செய்யப்பட்டிருந்தமை | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94(1) இன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பின்னர் வருட முடிவில் எஞ்சிய நிதி ஏற்பாட்டு எல்லையை மிஞ்சாத வகையில் பொறுப்புக்களுக்கு முற்படுத்தப்பட்டமை | இணக்கமற்றது | உரிய வருடத்தில் நிதி ஏற்பாட்டின் ஊடாக கடந்த வருடங்களுக்குரிய செயற்றிட்டங்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஏற்பட்டமையின் காரணமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டை மிஞ்சி பொறுப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்ட போதும் அங்கீகரிக்கப்பட்ட நிதி எல்லையை மிஞ்சி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | மீளாய்வு வருடத்திற்குரிய செயற்றிட்டங்கள் அவ்வருடத்தினுள்ளேயே பூரணப்படுத்தப் படுத்துவதன் ஊடாக அவ் வருடத்தினுள் கொடுப்பனவு செய்வதற்குத் தேவையான செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல். |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு இணங்குதல். | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையாக உள்ள கடன் நிலுவைகள் பற்றிய காலப் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமை | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் பேணப்பட்டு வந்த தடைப்பட்டிருந்த கடன் நிலுவைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றமை | இணக்கமற்றது | மரணமடைதல் அல்லது சேவையை விட்டுச் செல்லல் | அவ்வாறான ஊழியர்களின் செயற்பாடுகளை வினைத்திறனாக்கல். |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13.1 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்பு தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணிச் செல்கின்றமை. | இணக்கமானது | | |
| 14 | **சில்லறைக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு வருட நிறைவில் காசுப் புத்தக நிலுவை திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கின்றமை | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட நடைமுறை துணை சில்லறைக் கணக்கு, அப் பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கின்றமை. | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் பிரகாரம் அங்கீகரித்த எல்லையை மிஞ்சிச் செல்லாத வகையில் நடைமுறை துணை சில்லறைக் காசு முற்பணம் வெளியிடப்பட்டிருக்கின்றமை | இணக்கமானது | | |
| 14.4 | சில்லறைக் காசு கணக்கின் மீதி திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்பீடு செய்தல். | இணக்கமானது | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | உரிய ஒழுங்குவிதிகளுக்கு இணங்க சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமை | இணக்கமற்றது | இந்த அமைச்சு வருமானம் உழைக்கின்ற நிறுவனமொன்று அல்ல. | ஏற்புடையதன்று |
| 15.2 | சேகரிக்கப்பட்டிருந்த வருமானம், வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டிருக்கின்றமை. | இணக்கமற்றது | அதே | ஏற்புடையதன்று |
| 15.3 | நி.பி. 176 இற்கு ஏற்ப நிலுவை வருமான அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றமை. | இணக்கமற்றது | அதே | ஏற்புடையதன்று |
| 16 | **மனிதவள முகாமைத்துவம்.** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லையினுள் பதவியணி பேணிச் செல்கின்றமை. | இணக்கமானது | | |
| 16.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் அலுவலக பட்டியல் எழுத்து மூலம் வழங்கப்பட்டிருக்கின்றமை. | இணக்கமானது | | |
| 16.3 | 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அறிக்கைகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை | இணக்கமானது | | |
| 17 | **பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்.** | | | |
| 17.1 | தகவல் அறிதல் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தகவல் அலுவலரொருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் ஆவணமொன்று இற்றைப்படுத்தப்பட்டு பேணிச் செல்லல். | இணக்கமானது | | |
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல் அந்த இணையத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டிருப்பதுடன் இணையத்தளத்தின் ஊடாக அல்லது மாற்று வழியின் ஊடாக நிறுவனம் பற்றி பொதுமக்களின் பாராட்டுக்கள் / குறைபாடுகளை வெளிப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றமை. | இணக்கமற்றது | தற்பொழுதுள்ள இணைய தளத்தை நீண்ட காலமாக இற்றைப்படுத்தியிருக்காததுடன் அது பரிணாமத்திலுமில்லை. அமைச்சு தொடர்பாக புதிய இணையத்தளமொன்றை உருவாக்கி பேணப்படுவதுடன் அது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. | பொது மக்களின் பாராட்டு / குற்றச்சாட்டுக்களை வெளிப்படுத்துவதற்கான வசதிகளைக் கொண்ட வகையில் அமைச்சின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இணைய தளத்தை தயார் செய்து நிறைவு செய்தல். |
| 17.3 | தகவல் அறிதல் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள் அல்லது வருடத்திற்கு ஒரு முறை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றமை. | இணக்கமானது | | |
| 18 | **பிரசைகள் பிரகடனத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2008 ஆம் இலக்க மற்றும் ஆம் இலக்க அரச நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசைகள் / சேவை வழங்குனர் பிரகடனம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கின்றமை | இணக்கமானது | | |
| 18.2 | அச் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம், பிரசைகள் / சேவை வழங்குனர் பிரகடனத்தை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பாக நிறுவனத்தினால் முறைமையொன்று தயார் செய்யப்பட்டிருக்கின்றமை. | இணக்கமானது | | |
| 19 | **மனித உரிமைகள் திட்டத்தை தயார் செய்தல்.** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை 02/2018 இல மற்றும் இணைப்பு 02 மாதிரிப் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வளங்கள் திட்டமொன்று தயார் செய்யப்பட்டிருக்கின்றமை. | இணக்கமானது | | |
| 19.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்கள் தொடர்பாகவும் ஒரு வருடத்திற்கு குறைந்த பட்சம் 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்று மேலே குறிப்பிட்ட மனிதவள திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றமை. | இணக்கமானது | | |
| 19.3 | மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கை இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மொத்த பதவியணி தொடர்பாக வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகள் கையொப்பமிட்டிருக்கின்றமை. | இணக்கமானது | | |
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின் 6.5 பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயார் செய்தல், இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் பற்றிய பொறுப்பு சாட்டப்பட்டு சிரேஷ்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றமை | இணக்கமானது | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளுக்கு பதில் வழங்குதல்.** | | | |
| 20.1 | எதிர்வரும் வருடம் தொடர்பாக கணக்காய்வாளரினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு பந்தி ஊடாக காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |